


நம் போன்றவர்களுக்கு ஏற்றது
முதல்தரமான ஸிகரட்
நம்பர் டென்
வெர்ஜினியா
NUMBER
TEN
VIRGINIA


VINOLIA
WHITE ROSE SOAP
காலை வேளையில் ஒரு இந்திய ரோஜா தோட்டத்திலேற்படக் கூடிய குதூகல உணர்ச்சியை விநோலியா ஒயிட் ரோஸ் சோப் உங்களுக்குத் தருகிறது. இச் சோப்பின் மிருதுவான செழிப்பாயுண்டாகும் நுரை மிகவும் நேர்த்தியான சருமத்தையும் ஒழுங்காக சுத்தம் செய்கிறது—மேலும் அதன் நறுமணம் உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது. உங்கள் அழகை அதிகப்படுத்த இச் சோப்பைவிட மேன்மையானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. விநோலியா ஒயிட் ரோஸை உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பாகக் கொள்ளுங்கள்.
விநோலியா ஒயிட் ரோஸ் சோப்
VWR. 19-23 TM
VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 | இதழ் 32 — 1947 மார்ச் 9 — விய ஷ மாசி 25

இந்தியாவில் தேசபக்தர் என்றால் ஒரு தடவையாவது சிறை சென்றிருக்க வேண்டும். பல தடவைகள் சிறைக்குச் சென்று, அரும் பெரும் தியாகங்களைச் செய்தவரே அதி தீவிர தேசபக்தர் என்ற அழியாப் புகழுக்குப் பாத்திரராவார். அவருக்குத்தான் கோடிக் கணக்கான ஜனங்களின் ஹிருதய பீடத்திலும் இடம் கிடைக்கும்.

எனினும் சில மகா புருஷர்களுக்கு மாத்திரம் இவ்விஷயத்தில் விதிவிலக்கு உண்டு.

அதாவது, இரண்டாவதாகக் கூறப்பட்ட மேற்படி மகோன்னத ஸ்தானத்திற்குச் சிறை செல்லாமலேயே வரும் பாக்கியசாலிகளும் இருக்கிறார்கள்.



ரவீந்திரநாத தாகூர் போன்ற கவிஞர்களும் ஸர் ராதா கிருஷ்ணன் போன்ற கலைஞர்களும் அந் திருக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே.

முகத்தில் அபாரமான தேஜஸ், வாக்கில் கலைவாணியின் கடாட்சம், உள்ளத்தில் களங்கமற்ற தேச பக்தி — இந்தப் பாக்கியங்கள் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஸர் ராதா கிருஷ்ணன் அவர்களே இவ்வாரம் நமது அட்டைப் படத்தில் கம்பீரமாக வீற்றிருக்கிறார்.

ராத கிருஷ்ணன் அவர்கள் காங்கிரஸ் பக்தர், காந்திஜியின் பக்தர், பாரத அன்னையின் அருந்தவப் புதல்வர்களில் ஒருவர். ஹிந்து மத தத்துவ ஞானி.

மகாத்மா காந்தியின் 70-வது ஜெயந்தி வைபவத்தின் போது, அம் மகானுக்கு ராதாகிருஷ்ணன் அவர்கள் காணிக்கையாக அளித்த அற்புத நூல் சரித்திரப் பிரசித்தி பெற்றதாகும். மேதாவிகளான பேராசிரியர்களையும் [illegible] செய்யும் ஆக்ஸ்போர்ட் சர்வ கலாசாலை மாணவர்கள், ராதா கிருஷ்ணன் அவர்களின் அறிவு ததும்பும் அற்புதப் பிரசங்கங்களை 'ஆ'வென்று வாயைப் பிளந்துகொண்டு மெய்மறந்து கேட்பார்கள் என்பதைப் பலரும் அறிந்திருக்கலாம்.

இவ்வாறாக, தமது நாவன்மையாலும் எழுத்து வன்மையாலும் ராதாகிருஷ்ணன் அவர்கள் தேசத்திற்கு இதுவரை செய்துள்ள, இன்னும் செய்து வரும் தொண்டு அளவற்றதாகும்.

நிற்க, சமீபத்தில் நடந்த அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் வெளியே இருந்து குழப்பம் செய்தவர்களைப்போல் உள்ளே வந்தும் குழப்பம் செய்தவர்கள் உண்டல்லவா?

"இந்த அடிமை வாழ்வு வேதனையை இனி எவ்வளவு காலம் சகிப்பது? பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்பு ஒழிந்து விடும்: ஒழியத்தான் வேண்டும்" என்று குழப்பவாதிகளின் மண்டையில் உறைக்கும்படி அரசியல் நிர்ணய மகாசபையில் உணர்ச்சி மிக்க கர்ஜனை புரிந்தவர் ராதாகிருஷ்ணன் அவர்கள்தான்.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 32

என்ன சேதி?

யாசகருக்கு யாசகம்!

காலஞ் சென்ற மாளவியாஜி நன்கொடை வசூல் செய்வதிலே பலே கெட்டிக்காரர்.

நன்கொடைக்காக வென்று கிளம்பினால், ராஜாக்களிடமும் மகாராஜாக்களிடமும் லட்சக்கணக்கான ரூபாய் வசூல் செய்து கொண்டு திரும்புவார். சாதாரண மக்களுக்குத் தொந்தரவு கொடுப்பதே இல்லை. காந்திஜி கூட, மாளவியாஜியைப் பற்றிக் குறிப்பிடும்போது, "அவர் மகாராஜாக்களிடம் யாசகம் வாங்குபவர்; நான் ஏழைகளிடம் யாசகம் வாங்குபவன்!" என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு.

மகாராஜாக்களிடமும் கோமகன்வார்களிடமும் யாசகம் வாங்கிய பண்டித மாளவியாஜிக்காக இன்று கோமகன்வார்களும் மகாராஜாக்களும், பண்டித ஜவாஹர்லால் நேரு உட்பட இந்தியப் பொது வாழ்க்கையிலே புகழ்பெற்ற 180 பிரமுகர்கள் யாசகம் கேட்க முன்வந்திருக்கிறார்கள்.

மாளவியாஜியைத் தவிர வேறு யாருக்கு இத்தகைய பாக்கியம் கிடைக்கும்?

தேசத்துக்கும் சமூகத்துக்கும் மதத்துக்குமாக சென்ற அறுபது வருஷங்களாக இடைவிடாமல் பாடுபட்டு வந்த மேற்படி பெரியாருடைய ஞாபகார்த்தமாக ஒரு நிதி திரட்டுவதென்று முடிவு செய்து, அதற்காக நம் தலைவர்கள் ஓர் அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நிதிக்கு வசூலாகும் தொகையை, பண்டித மாளவியாஜி தம் உயிர்போலப் பாதுகாத்து வந்த காசி சர்வகலாசாலைக்கும் வேறு பிரயோஜனமான காரியங்களுக்கும் செலவு செய்வதென்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

நவ இந்தியாவின் சிருஷ்டிக்குப் பெரிதும் உழைத்த மேற்படி மகத்தான தேசோபகாரியின் ஞாபகார்த்த நிதிக்குத் தமிழ் மக்கள் தாராளமாகப் பண உதவி செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

மற்றொரு கைங்கரியம்

மாளவியாஜி ஞாபகார்த்த நிதிக்குப் பணம் கொடுக்கும்போது நம்முடைய கோடம்பாக்கம் ஹரிஜனக் கைத்தொழில் பள்ளிக்கூடத்தையும் கொஞ்சம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். கோடம்பாக்கம் ஹரிஜனப் பள்ளிக்கூடம் ஹரிஜன மாணவர்களுக்கு எத்தகைய மகத்தான தொண்டு செய்து வருகிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம். இம்மாதம் 15-ம் தேதியிலிருந்து அடுத்த மாதம் 15-ம் தேதி வரை மேற்படி பள்ளிக்கூடத்தார் ஒரு பொருட்காட்சி நடத்தப் போகிறார்களாம். இந்தப் பொருட் காட்சி மூலம் கிடைக்கும் நிதியை மேற்படி கைத்தொழில் பள்ளிக்கூடத்தின் கட்டிட விஸ்தரிப்புக்கு உபயோகிக்கப் போகிறார்களாம். பேஷான காரியம்.

மேற்படி பொருட்காட்சிக் கமிட்டியினர் இது சம்பந்தமாக அனுப்பியிருக்கும் துண்டுப் பிரசுரத்தைப் பார்க்கும்போது, அவர்கள் ரொம்பப் பிரமாதமான முறையில் இந்தப் பொருட் காட்சியை நடத்தப் போவதாகத் தெரிகிறது. பொது ஜனங்கள் எல்லோரும் இந்தப் பொருட் காட்சிக்குப் போவதுடன், வியாபாரப் பிரமுகர்கள் இதில் ஸ்டால்கள் எடுத்து மேற்படி பொருட் காட்சிக் கமிட்டியாரின் லட்சியம் சித்தியடைய உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

செக்ஷன் 93 ஆஜர்!

வெள்ளைக்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியே போனாலும், செக்ஷன் 93 மாத்திரம் இந்தியாவை விட்டு வெளியே போகப் போவதாகத் தெரியவில்லை.

செக்ஷன் 93 இப்போது பஞ்சாப் மாகாணத்திலே தஞ்சம் புகுந்திருக்கிறது. இதற்குக் காரணம், சென்ற சில தினங்களாக அந்த மாகாணத்திலே நடந்து வரும் எதிர்பாராத சம்பவங்களேயாகும்.

ஒரு நாள் காலை பொழுது புலர்ந்ததும், பாஞ்சால பிரதம மந்திரி மாலிக் கிஸிர் ஹயத்கான் பாஞ்சால அரசியல் மேடையிலே தோன்றி, "போய் வாரேன், போய் வாரேன்!" என்று சொல்லி விட்டுத் திரைக்குப் பின்னாலே மறைந்தார். மறு நாள் காலையிலிருந்து அங்கே துப்பாக்கிப் பிரயோகங்களும் தெருக்களிலே பயங்கரமான வகுப்புக் கலகங்களும் நடப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

காரணம் என்ன?

இதற்குப் பல காரணங்கள் இருந்த போதிலும், இப்போது திடீரென்று வகுப்புக் கலகம் மூண்டதற்கு முக்கிய பொறுப்பு கிஸிர் ஹயத்கான் அவர்களையே சேரும். கிஸிர் ஹயத்கான் திடீரென்று தம்முடைய பதவியை ராஜிநாமாச் செய்ததால், கவர்னர் முஸ்லிம் லீக்கை அழைத்து மந்திரி சபை யமைக்கும்படியாகச் சொல்லியிருக்கிறார். முஸ்லிம் லீக்கும் மந்திரி சபை அமைப்பதிலே வெகு மும்முரமாக இருக்கிறது. கூட்டு மந்திரி சபையாக இல்லாமல், தனி முஸ்லிம் மந்திரி சபையாக ஏற்பட்டால், தங்கள் உரிமைகளுக்குப் பங்கம் வருமோ என்னவோ என்று மைனாரிட்டிகளான ஹிந்துக்களும் சீக்கியர்களும் பயப்படுகிறார்கள். கலகத்துக்கு இதுவே காரணம். சிந்து மாகாணத்திலே தற்போது நடந்து வரும் எதேச்சாதிகார அரசாங்கத்தைப் பார்த்த பிறகு ஹிந்துக்களும் சீக்கியர்களும் அந்த மாதிரி யாகப் பயப்படுவது நியாயமே யாகும்.

கிஸிர் ஹயத்கான் தாம் ராஜிநாமாச் செய்ததற்கு, பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆட்லி சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை மேலே பழியைத் தூக்கிப் போடுகிறார். ஆனால், கிஸிர் சாஹப்பை ராஜிநாமாச் செய்யும்படியாக மேஜர் ஆட்லி அந்த அறிக்கையிலே ஒரு வார்த்தை கூடச் சொல்லவே இல்லை. உண்மையாகச் சொல்லப் போனால், முஸ்லிம் லீக் திரை மறைவில் நடத்திய மிரட்டல் நாடகத்தைக் கண்டு பயந்தே அவர் ராஜிநாமாச் செய்திருக்க வேண்டும்.

கிஸிர் ஹயத்கான் அவசரப் பட்டுச் செய்த காரியத்தின் விளைவாக, செக்ஷன் 93 ஆட்சி பஞ்சாப்புக்குக் கிடைத்திருக்கிறது. இன்னும் என்னென்ன விபரீதங்கள் நிகழுமோ?

சிறு கதைப் போட்டி


1946-ம் வருஷத்துக் "கல்கி" சிறு கதைப் போட்டிக்கு மொத்தம் 1,162 கதைகள் வந்தன. அவற்றின் முதற் பரிசோதனை தமிழ் ஹரிஜன் ஆசிரியர் ஸ்ரீ பொ. திருகூடசுந்தரம் பிள்ளை எம்.ஏ., பி.எல். அவர்களால் நடத்தப்பட்டு முடிந்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மற்றப் பஞ்சாயத்து அங்கத்தினர் இப்போது கதைகளைப் பார்வையிட்டு வருகிறார்கள்.

ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் பஞ்சாயத்தாரின் முடிவை வெளியிடுவது சாத்தியமாயிருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

நன்கொடை

புது டில்லியில் ராஜாஜி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட "கலா மந்திரம்" என்னும் ஸ்தாபனத்துக்குக் காரைக்குடி தேச பக்தர் ஸ்ரீ சா. கணேசன் அவர்களும் இன்னும் சில தன வைசியப் பிரமுகர்களும் விஜயம் செய்தார்கள் என்றும், மேற்படி ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்காக ரூ. 1001 (ரூபாய் ஆயிரத்தொன்று) தன வைசிய அன்பர்களால் நன்கொடை அளிக்கப்பட்டது என்றும் அறிந்து மிக்க மகிழ்ச்சி யடைகிறோம்.

பிரகாசம்காருவின் பரிதாப நிலை




விளக்கெண்ணெய் வைத்தியம்
லக்ஷக் கணக்கில் லாபம் திரட்டி ஜீரணமின்றிக் கஷ்டப்படும் முதலாளிகளுக்கு அவர்களுடைய பளுவைக் குறைப்பதற்காக இந்திய சர்க்கார் 25% லாபவரி விதிக்கப் போகிறார்கள்.
முதலாளிகள்
நாம் வாள் தீட்டுவதை நிறுத்தி வாளாவிருக்கப் போவதில்லையென்று லக்ஷ்மணபுரியில் கூடிய சோஷலிஸ்ட் கட்சி மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.
ஜெயப் பிரகாஷ் நாராயணன்
வகுப்பு வாதத்திற்கு மற்றொரு மாகாணம் பலி?
பஞ்சாப்
கொக்குகளின் அவதி
முப்பெரும் வல்லரசுகள் மகாநாடு மாஸ்கோவில் நடக்கப் போகிறது.
பிரிட்டன்
அமெரிக்கா
ஸ்டாலின்
ஜெர்மனி
“இவ் வுலகில் இரண்டே பொதுவுடைமை வாதிகள் இருக்கின்றனர். ஒருவர் ஸ்டாலின் மற்றொருவர் நானே!”
— பர்னர்ட் ஷா
ஸ்டாலின்
பர்னர்ட் ஷா

குபேரர்களின் கூக்குரல்

ஓரே கூக்குரல்! எங்கு பார்த்தாலும் கூக்குரல்!

ஏழைகளின் ஈனக்குரல் அல்ல; லக்ஷாதிபதிகளின் கோபக் குரல்தான் காதுகளைத் துளைக்கின்றது.

கல்கத்தா, பம்பாய், சென்னை பண மார்க்கெட்டுகளெல்லாம் மூடப்பட்டு விட்டன. கைத்தொழில்களுக்கெல்லாம் ஆபத்து வந்து விட்டதாம். தேசத்தின் பொருளாதார மாளிகையே இடிந்து விடப் போகிறதாம். உற்பத்தி குறைந்து, சாமான்களின் பஞ்சம் தீராது, ஜனங்கள் எல்லோரும் தவிக்கப் போகிறார்களாம்.

போதாக் குறைக்கு வேலையில்லாத் திண்டாட்டமும் எல்லோரையும் வாட்டப் போகின்றதாம்.

பெரிய முதலாளிகளெல்லோரும் மேற்கூறியவாறு இந்திய தேசீய சர்க்காரைப் பயமுறுத்தியிருக்கிறார்கள்.

மேற்படி குபேரர்களின் கோபத்துக்குக் காரணம் என்ன?

* * *

சமீபத்தில், இந்திய சர்க்கார் நிதி மந்திரியும் முஸ்லிம் லீக்கின் நெ. 2 பிரமுகருமான ஸ்ரீ லியாகத் அலிகான், 1947-48-ம் வருஷ வரவு செலவுத் திட்டத்தை இந்தியச் சட்டசபையில் சமர்ப்பித்தபோது, சர்க்கார் விதிக்கப் போகும் சில புதிய வரிகளை வெளியிட்டார். முக்கியமாக, ஒரு லக்ஷம் ரூபாய்க்கு மேல் லாபம் பெறுவோர், மேற்படி லாபத்தில் கால் பங்கைச் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும் என்ற லாப வரியை எதிர்த்தே குபேரர்கள் இவ்வளவு தூரம் கூக்குரலிட ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஏழைத் தொழிலாளருக்கு அற்ப சம்பள உயர்வு கொடுப்பதற்குக்கூட ஆயிரம் ஆட்சேபணைகளைக் கிளப்பும் பிரபுக்கள், அவர்களுடைய லாபத்தில் பங்கு கேட்கும் அரசாங்கத்தின் மீது ஆத்திரங் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வதைக் குறித்து யாரும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

சர்க்கார் விதிக்கப் போகும் லாப வரி சாதாரண வியாபாரிகளையோ, கைத்தொழில்களையோ பாதிக்காது.

யுத்த காலத்தில் கொள்ளை லாபம் அடித்த, இன்றும் அமித லாபம் பெற்றுவரும் பெரிய கைத்தொழில்களில் ஈடுபட்டிருப்போர், தேசீய சர்க்கார் நியாயமென்று கருதும் வரிகளை வரவேற்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் நெருக்கடியான சமயத்தில் தேசத்துக்கு அற்ப உதவியாவது புரிந்தவர்களாவார்கள்.

தங்களுக்கு எல்லையின்றி லாபம் பெற உரிமையுண்டென்று கூறும் முதலாளிகள், தாங்கள் செய்ய வேண்டிய இரண்டொரு கடமைகள் இருக்கின்றன என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது, தாங்கள் பெறும் லாபத்தில் ஓர் அற்பப் பகுதியைத் தொழிலாளருக்கு உதவியாகக் கொடுக்க வேண்டும். பொதுஜன க்ஷேமார்த்தமாக நடத்தும் சர்க்கார் நிர்வாகத்துக்கு உதவியாக விதிக்கப்படும் நியாயமான வரிகளை, அர்த்தமற்ற முறையில் ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் செய்யக் கூடாது.

பெரிய கைத்தொழில்களைச் சர்க்கார் தங்களுடைய நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளாமல் தனிப்பட்டவர்களின் பொறுப்பில் விட்டிருப்பதற்கு, அவர்கள் மேற்படி உதவியாவது செய்ய வேண்டாமா?

* * *

1947-48-ல் இந்திய சர்க்காரின் வரவு சுமார் 279½ கோடி ரூபாயாகும். செலவு 328 கோடியாகிறது. துண்டு விழும் 48½ கோடி ரூபாயைச் சரிக்கட்டவே புதிய வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வரிகளின் மூலம் சர்க்காருக்கு 40 கோடி ரூபாய்தான் கிடைக்கிறது. புதிய வரிகள் விதித்த பின்னரும் துண்டு விழுவது 8½ கோடியாகும். இதைத் தவிர, உப்பு வரியை ரத்து செய்வதன் மூலம் சுமார் 8½ கோடி ரூபாய் வருமானம்

குறைந்து விடுவதால் வரிகளால் கிடைத்த தொகை போக, துண்டு விழும் மொத்தத் தொகை 17 கோடியாகிறது.

எனவே, வரிகள் விதித்த பின்னரும் துண்டு விழுவதால் இந்திய தேசிய சர்க்காரின் நிதி நிலைமை திருப்திகரமாக இருப்பதற்காக முதலாளிகள் லாபத்தில் ஒரு பகுதியைத் தியாகம் செய்து தங்களுடைய பெருந்தன்மையைக் காட்ட வேண்டுமே யன்றி, கூக்குரலிடுவது நேர்மையாகாது.

லாப வரியைக் குறித்து வருந்தும் வர்த்தக முதலாளிகளுக்கு, இந்தியர் வர்த்தக, கைத்தொழில் ஐக்கிய சங்கத்தின் வருஷாந்தரக் கூட்டத்தில் பண்டித ஜவாஹர்லால் நேரு கூறியுள்ள உறுதி மொழிகள் ஆறுதல் அளிக்கும்.

கைத்தொழில்களின் அபிவிருத்திக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டுமென்பது சர்க்காரின் உத்தேசமில்லையென்றும், அதற்கு மாறாக உற்பத்தி அதிகரிக்கவும் கைத்தொழில்கள் வளர்ச்சியடையவும் சகல வசதிகளும் அளிக்க வேண்டுமென்பதே தங்களுடைய நோக்கமென்றும், சர்க்கார் கைக்கொள்ளும் முறைகளால் வியாபார—கைத்தொழில் அபிவிருத்திக்குப் பாதகம் ஏற்படுமென்று தெரிந்தால் அத்தகைய தவறைத் திருத்திக் கொள்ளச் சர்க்கார் தயங்கமாட்டார்களென்றும் ஜவாஹர்லால்ஜி உறுதி மொழியளித்திருக்கிறார். எனவே, இனிமேலாவது முதலாளிகள் தங்களுடைய கண்டனத்தின் உக்ரத்தைத் தணித்துக் கொள்ளுவார்களென எதிர்பார்க்கிறோம்.

* * *

நிதி மந்திரி ஸ்ரீ லியாகத் அலிகான் சமர்ப்பித்துள்ள முதலாவது தேசிய வரவு செலவுத் திட்டத்தில் பல நல்ல அம்சங்கள் இருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

அவைகளில், உப்பு வரி ரத்து செய்யப்பட்டிருப்பதுதான் மிக மிக முக்கியமானது.

பிரிட்டிஷார் இந்தியாவில் விதித்த அக்கிரமமான வரிகளுக்குக் குறைவேயில்லை. அதிலும் உப்பு வரியைப் போல் அநீதியான ஒரு வரி வேறெதுவுமே இல்லை.

உப்பு வரி விதிப்பது மனிதன் உட்கொள்ளும் காற்றுக்கு வரி விதிப்பதற்கொப்பாகும் என்பது மிகையாகாது.

தவிர, பிரிட்டிஷ் கொடுங்கோலாட்சி ஆண்டி முதல் அரசன் வரையில் சகலருடைய வாழ்க்கையையும் பாதித்து வந்ததென்பதற்கு, உப்பு வரியைக் காட்டிலும் சிறந்த உதாரணம் வேறெதுவும் தேவையில்லை.

இந்த அட்டூழியத்தைத்தான், முன்னர் மகாத்மா காந்தி வைஸ்ராய் இர்வினுக்கு எழுதிய சரித்திரப் பிரசித்தமான கடிதத்தில் வெகு கடுமையாகக் கண்டித்திருந்தார்.

ஒருபுறம் ஆங்கில அதிகார வர்க்கத்தின் ஆடம்பரமான போக வாழ்க்கையின் உச்ச நிலையையும், மற்றொரு புறம் உண்ண உணவும் உடுக்கக் கந்தையும் இருக்க இடமுமின்றித் தவிக்கும் எண்ணிக்கையற்ற இந்திய ஏழைகளின் சோக வாழ்க்கையின் உச்ச நிலையையும் ஒப்பிட்டு, மகாத்மா காந்தி இர்வினுக்கு எழுதிய கடிதத்தைக் கண்டு அவ்வமயம் எல்லோரும் இரத்தக் கண்ணீர் வடித்தனர்.

உப்பு வரியை ரத்து செய்துள்ள நிதி மந்திரி, இந்திய ஏழைகளின் பரிதாப நிலைமையைக் குறித்துக் கண்ணீர் வடித்திருப்பது, காந்திஜி இர்வினுக்கு எழுதிய கடிதத்தை ஒவ்வொருவருக்கும் ஞாபக மூட்டும் என்பதில் சந்தேகமில்லை.

உப்பு வரி ஒழிந்து விட்டதால், இனி உள்நாட்டிலேயே உப்பு உற்பத்தி அதிகமாகி, வெளிநாடுகளிலிருந்து அது இறக்குமதியாகும் விபரீதமும் நிச்சயமாக ஒழிந்து விடுமென்று நம்புகிறோம்.

உப்பு வரியைக் கண்டித்து 1930-ம் வருஷம் ஆரம்பமான உப்பு சத்தியாக்கிரகம் 1947-ம் வருஷம் முதலாவது இந்திய தேசிய சர்க்கார் ஆட்சியில் வெற்றியைக் கொடுத்திருப்பதும், உப்பு வரியை ஆதரித்து வரும் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த ஒரு பிரமுகரே அந்த வெற்றிக்கு ஓரளவு காரணஸ்தராக இருப்பதும் காலப் போக்கின் விசித்திரமே.

* * *

பிரஸ்தாப வரவு செலவுத் திட்டத்தில், அபிவிருத்தித் திட்டங்களுக்காக 45 கோடி ரூபாயும் மாகாணங்களுக்குக் கடன் கொடுத்து உதவுவதற்காக 32 கோடி ரூபாயும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

வகுப்பு வாதத்தைக் கிளப்பி விட்டு இந்திய சர்க்காருடன் ஒத்துழைக்க

மற்றும் மாகாணங்களுக்கும் மேற்படி கடன் தொகையில் பங்கு உண்டா என்பது பற்றி நிதிமந்திரி எதுவும் கூறவில்லை!

நிற்க. நிதி மந்திரி தமது பிரசங்கத்தில் இந்திய அரசியல் நிலைமையைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவின் நிர்வாக அதிகாரத்தை பிரிட்டிஷ் சர்க்கார் அடுத்த வருஷம் இந்தியர்களுடைய கைக்கே மாற்றி விடப்போவதால், இனி எதிர்கால விதியை உருவாக்கும் பொறுப்பு இந்தியர்களின் கையிலேயே இருக்கிறதென்றும், அவ்வித நிர்வாக மாற்றம் அமைதியாக ஏற்படும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமையென்றும் நிதி மந்திரி கூறியிருப்பதைக் குறித்து அபிப்பிராய பேதம் இருக்கவே இடமில்லை.

ஆனால், அவ்விதம் அமைதியாக நிர்வாக மாற்றம் ஏற்படும் விஷயமாக முஸ்லிம் லீக் உதவி புரியாவிட்டாலும் உபத்திரவமாவது செய்யாமல் இருக்குமா என்பதுதான் இப்போதைய கேள்வியாகும்.

முஸ்லிம் லீக்கர்கள் தற்போது அனுஷ்டித்து வரும் கொள்கை இதுதான்:

அவர்கள் பெரும்பான்மையோராக இருக்கும் இடங்களில் சிறுபான்மையோரை ஹிம்சிப்பது: சிறுபான்மையோராக இருக்கும் இடங்களில் பெரும்பாலோருக்கு இடைவிடாத தொல்லையைக் கொடுத்துப் பித்தலாட்டப் பிரசாரத்திலும் அபாண்டமான புகார்களிலும் ஈடுபடுவது.

இன்று வங்காளம், சிந்து, பாஞ்சாலம், வடமேற்கு எல்லைப்புறம் முதலிய பல மாகாணங்களிலும் நடந்து வரும் கோர நாடகங்களின் 'தத்துவம்' அதுதான்.

'கூட்டுப் பொறுப்பு' என்ற முறையை அனுசரித்து ஸ்ரீ லியாகத் அலிகான், அரசியல் நிலைமை பற்றி விபரீதமான வியாக்கியானம் செய்யவில்லையாயினும், அவரது பிரசங்கத்தின் பல பகுதிகளிலும் பாக்கிஸ்தான் பாஷை தென்படுவதைக் குறித்து யாருக்கும் சந்தேகமிருக்க இடமில்லை.

இந்தியாவின் பரம விரோதிகளான சர்ச்சில் கோஷ்டியார் இந்தியாவைப் பற்றிப் பேசும்போது, அது ஒரு கண்டமென்றும், ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லாத பல குட்டி தேசங்களடங்கிய இந்தியாவைப் பிரிட்டிஷார் தங்களுடைய நிர்வாகத் திறமையாலும் பாரபட்சமற்ற தன்மையாலும் ஒன்றுபடுத்தி வைத்திருப்பதாகவும் கூறுவது வழக்கம். அதே பாஷையை ஸ்ரீ லியாகத் அலிகானும் கடன் வாங்கிக் கொண்டிருப்பதுதான் வருந்தத் தக்கதாகும்.

பெரும்பாலான ஜனங்களுக்கு அதிகப்படியான நன்மை செய்வதே தமது நோக்கம் என்று நிதி மந்திரி ஓரிடத்தில் கூறுகிறார். அது உண்மையாயின் அவர் 'கண்டம்,' 'துண்டம்' முதலிய வார்த்தைகளை மறந்துவிட வேண்டும்.

ஏனெனில், பலமும் உறுதியும் ஒற்றுமையும் வாய்ந்த இந்திய தேசிய சர்க்கார் கைக்கொள்ளும் அகில இந்தியத் திட்டங்களால்தான் பெரும்பாலான ஜனங்களுக்கும் அதிகப்படியான நன்மை ஏற்படுவது சாத்தியமாகும்.

சுருங்கக் கூறுமிடத்து, நிதி மந்திரி லியாகத் அலிகானின் வரவு செலவுத் திட்டத்தில் ஆட்சேபகரமான அம்சங்கள் அதிகமில்லை. என்றாலும் அவரது மனதில் கூட்டுப் பொறுப்பு உணர்ச்சிக்கும் பாக்கிஸ்தான் பக்திக்கும் நடந்துள்ள போராட்டம் சிற்சில இடங்களில் பிரதிபலித்திருப்பதை நாம் குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை.

* * *

இச் சந்தர்ப்பத்தில், பிரகாசம் காருவின் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றியும் ஒரு வார்த்தை.

ஜனங்களின் க்ஷேமத்திற்கான பல முக்கிய துறைகளுக்குப் போதிய தொகை ஒதுக்கி வைக்க முடியாததற்காக தாம் மிகவும் வருந்துவதாய்ப் பிரகாசம்காரு பரிதவித்திருக்கிறார். இந்தியாவிலேயே வேறெந்த மாகாணமும் கைக் கொள்ளத் துணியாத திட்டங்களை நிறைவேற்றப் போவதாகப் பறைசாற்றி வந்த ஸ்ரீ பிரகாசம் அவர்கள் அவ்வாறு பிரலாபித்திருப்பதிலிருந்து, அவரது திட்டங்கள் அஸ்திவார மற்ற ஆகாசக் கோட்டைத் திட்டங்கள்தான் என்றே முடிவு கட்ட வேண்டியிருக்கிறது.

பிரகாசம்காருவின் மீதே நம்பிக்கையில்லை என்று தீர்ப்புக் கூறியிருக்கும் சென்னை மாகாண மகா ஜனங்கள், அவரது திட்டங்கள் மீது எவ்வளவு நம்பிக்கை வைக்கப் போகிறார்கள் என்பது இனிமேல்தான் தெரியவேண்டும்!

நாடு சிரிக்கிறது!

நாடு மட்டுந்தானா சிரிக்கிறது? காடு சிரிக்கிறது! மாடும் மிருகங்களும் சிரிக்கின்றன! மரங்கள் சிரிக்கின்றன! செடியும் கொடியும் சிரிக்கின்றன! மலையும் குன்றும் சிரிக்கின்றன! தந்திக் கம்பங்களும் தீபஸ் தம்பங்களும் கூடச் சிரிக்கின்றன!

மனிதர்களோ சிரிக்கலாமா, வேண்டாமா என்று யோசனை செய்து விட்டு அக்கம் பக்கம் பார்த்து விட்டு, 'குபீர்' என்று சிரிக்கிறார்கள்! அப்புறம் உட்கார்ந்து ஒரு குரல் அழுகிறார்கள்!

நமக்கு ஏற்பட்ட அவமானத்தைக் குறித்து நாமே சிரிக்கிறது என்பது கொஞ்சம் கஷ்டமான காரியந்தான் அல்லவா?

ஆயினும், அந்த அவமானத்தில் ஒரு தமாஷும் இருந்தால், சிரிக்க வேண்டித் தான் வருகிறது. சிரித்துவிட்டு, "அடாடா! இப்படி ஆயிற்றே?" என்று ஒரு குரல் அழலாமென்றும் தோன்றும்.

சென்ற வாரத்தில் சென்னை மந்திரி சபை சம்பந்தமாக நடந்த காரியங்கள் அப்படிப்பட்ட இலட்சணம் உடையவை தான்! அவற்றை நினைத்துச் சிரிக்கவும் சிரிக்கலாம்; அழவும் அழலாம். இரண்டு காரியங்களையும் சேர்ந்தாற் போலவும் செய்யலாம்!

* * *

பழைய கதையைக் கொஞ்சம் இலேசாக ஞாபகப்படுத்திக் கொள்வோம். சுமார் ஒன்றரை வருஷத்துக்கு முன்னால் சென்னை மாகாணத்தில் ஒரு அதிசயமான கிளர்ச்சி ஆரம்பமாகி நடந்தது. அதாவது சென்னை மாகாணத்தின் ஒப்பற்ற அறிவாளியும் தியாகியும் திறமைசாலியுமான தலைவரைக் காங்கிரஸிலேயே சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பதுதான்.

மேற்படி கிளர்ச்சி தமிழ் நாட்டிலே ஆரம்பமாகி நடந்தது; ஆந்திர தேசத்திலும் தீவிரமாக நடந்தது.

"ராஜாஜியை நாலணா காங்கிரஸ் அங்கத்தினராகக் கூடச் சேர்க்கக் கூடாது" என்று ஆந்திர மாகாணக் காரியக் கமிட்டி தீர்மானம் செய்தது.

இந்த விந்தையான கிளர்ச்சிக்கு அடிப்படையான காரணம், வரப்போகும் மந்திரி சபைப் பதவிகளின்மீது ஏற்பட்ட மோகந்தான் என்பதை இம் மாகாணப் பொது மக்களில் ஒரு பகுதியார் அப்போது உணர்ந்து கொள்ளவில்லை.

பொய்க்கும் சூதுக்கும் அவ்வப்போது கொஞ்சம் செல்வாக்கு ஏற்படுவது இந்த உலகத்தின் இயல்பல்லவா? பொய்யும் சூதும் மேலோங்கி நின்ற காலம் அது.

ஆனால் வட நாட்டைச் சேர்ந்த நமது மாபெருந் தலைவர்களில் யாருக்கும் மேற்படி கிளர்ச்சி அர்த்தமாகவே இல்லை.

"சூரியன் உதயமானால் அதைப் பார்த்துச் சந்தோஷப்படுவார்கள்; அல்லது தோத்திரம் செய்து மகிழ்வார்கள். 'சூரியன் வேண்டாம்' என்று கிளர்ச்சி செய்வது உண்டா? இது என்ன வேடிக்கை!" என்று ஆஸாத், பட்டேல் முதலிய வடநாட்டுத் தலைவர்கள் அதிசயப் பட்டார்கள். மேற்படி கிளர்ச்சியின் உண்மையை அறிந்து வர ஜனாப் ஆஸப் அலியை அனுப்பி வைத்தார்கள்.

ராஜாஜிக்கு எதிரான கிளர்ச்சிக்கு மற்றவர்களின் மந்திரி பதவி மோகமே காரணம் என்பது வடநாட்டுத் தலைவர்களுக்கு நன்றாய்த் தெரிந்து போய்விட்டது.

ஆகையினாலேதான் ராஜாஜி, "இந்தத் தொல்லை எனக்கு வேண்டாம்" என்று பிடிவாதமாக விலகிக்கொண்ட பிறகுங்கூட, மேற்படி வடநாட்டுத் தலைவர்கள் அவரை விட்டுவிடச் சம்மதிக்கவில்லை.

சென்ற 1946-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் புதிய சென்னைச் சட்டசபையின் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் கூட்டம் கூடியபோது, 'ராஜாஜியைத் தலைவராகத் தேர்ந்தெடுங்கள்!" என்று யோசனை சொல்லி அனுப்பினார்கள்.

காந்தி மகாத்மாவும், ஜவாஹர்லால்ஜியும், ஆஸாத்தும், பட்டேலும் மேற்படி யோசனையை ஒரு முகமாகச் சொல்லி அனுப்ப வேண்டும் என்றால், அதை எவ்வளவு முக்கியமான விஷயமாக அவர்கள் கருதியிருக்க வேண்டும்?

ஆனபோதிலும் பதவி மோகத்தினாலும், துவேஷப் பிரசாரத்தினாலும் மூழ்கி யிருந்தவர்களின் காதில், அந்த மாபெருந் தலைவர்களின் புத்திமதி ஏறவில்லை!

மேற்படி புத்திமதியைப் புறக்கணித்து விட்டுத் தங்களுடைய சுயேச்சை உரிமையை நிலை நாட்டிக் கொண்டார்கள்!

ஆந்திர கேசரி பிரகாசம்காரு பிரதம மந்திரியானார். தமக்கேற்ற மந்திரி சபையையும் ஏற்படுத்திக் கொண்டார்.

சென்னை மாகாணத்தின் கஷ்டம் இந்தியாவின் லாபமாக ஏற்பட்டது. ராஜாஜி இடைக்கால இந்திய சர்க்காரில் மந்திரியானார்.

* * *

காங்கிரஸ் மேலிடத்தின் யோசனையைப் புறக்கணித்துவிட்டு ஸ்ரீ பிரகாசம் மந்திரி சபை ஏற்பட்டபோது, "இந்த மந்திரி சபையின் தலைவிதி அற்பாயுஸ் மரணந்தான். மூன்று மாதமோ அல்லது ஆறு மாதமோதான் இதன் வாழ்வு!" என்று சிலர் ஜாதகம் கணித்துச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொன்னதைக் காட்டிலும் அதிகமாகவே பிரகாசம் சர்க்காரின் ஆயுள் நீடித்துக்கொண்டு வந்தது.

இதற்குக் காரணம் ஸ்ரீ பிரகாசம்காரு தம்முடைய பதவியை நீடிக்கச் செய்வதில் காட்டிய அபார சிரத்தையும், அதற்காகக் கையாண்ட விசேஷ முறைகளுந்தான்.

முக்கியமாக, காந்தி மகாத்மாவின் நிர்மாணத் திட்டங்களை நடத்தி வைப்பதில் தமக்கு நிகர் யாரும் இல்லை என்று பெயர் வாங்க ஸ்ரீ பிரகாசம்காரு தீர்மானித்து விட்டார்.

விஸ்தாரமான கிராம நிர்மாணத் திட்டமும் கதர்த் திட்டமும் காகிதத்திலே போட்டார்.

மேற்படி திட்டங்களை நடத்தி வைக்க ஒரு புதிய உத்தியோக வர்க்கத்தையும் சிருஷ்டித்தார்.

"சென்னை மாகாணத்தில் புதிய நூல் துணி ஆலைகளுக்கும், இருக்கிற ஆலைகளை விஸ்தரிப்பதற்கும் இனிமேல் அனுமதி கிடையாது. சீக்கிரத்தில் எல்லா ஆலைகளையும் மூடிவிடப் போகிறோம்!" என்று பறை யறைந்தார்.

காந்தி மகான் கேவலம் மனிதர்களிடம் உள்ள வெறுப்பினால் ஒரு காரியத்தைச் செய்யவோ, சொல்லவோ கூடியவர் அல்ல. ஸ்ரீ பிரகாசம் காருவிடம் ஏற்கெனவே அவர் கண்டிருந்த குறைபாடுகளை மறந்து விட்டு, அவருடைய கிராம நிர்மாண-கதர்த் திட்டங்களுக்கு ஆசி கூறினார்.

ஆச்சாரிய கிருபளானியின் ஆதரவும் ஸ்ரீ பிரகாசத்துக்குக் கிடைத்தது.

வர்தா ஆசிரமத்தைச் சேர்ந்தவர்களோ பரவச மடைந்து தலை கீழாக நடக்கத் தொடங்கினார்கள்.

விநோபா பவேக்களும், ஜே. சி. குமரப்பாக்களும், ஜி. ராமசந்திரன்களும், "ஜே பிரகாசம்!" என்று கோஷமிட்டார்கள். "பிரகாசத்தைப் பாருங்கள்!" என்று மற்ற மாகாணக் காங்கிரஸ் மந்திரிகளுக்கு அவர்கள் உபதேசமும் செய்தார்கள்.

ஆனால் மற்ற மாகாணக் காங்கிரஸ் மந்திரிகளோ, பிரகாசத்தைப் பார்த்ததும் கண் கூசப் பெற்றவர்களாய், உடனே வேறு திசையை நோக்கினார்கள்!

* * *

மேற்கண்டவாறு ஸ்ரீ பிரகாசம் காரு விஸ்தாரமான காகிதத் திட்டங்களையும் புதிய புதிய உத்தியோக வர்க்கங்களையும் சிருஷ்டித்துக் கொண்டு வருகையில், மாகாணத்தின் பொது நிர்வாகம் நாளுக்கு நாள் ஊழலாகிக் கொண்டு வந்தது.

'கண்ட்ரோல்' முறைகளும் 'பெர்மிட்'களும், 'லைசென்ஸ்'களும் மேற்படி நிர்வாக ஊழல்களை நாளுக்கு நாள் அதிகமாக்கிக் கொண்டு வந்தன.

மந்திரி சபைக்குப் பலம் குறைந்து வருவது கண்டு, அதற்குச் சப்பைக் கட்டுத் தேடுவதற்காக மேற்படி 'பெர்மிட்'களும், 'கண்ட்ரோல்'களும் உபயோகிக்கப்படுவதாக வதந்திகள் பரவின.

மத்திய இந்திய சர்க்கார் எடுத்துவிட்ட கண்ட்ரோல்களைச் சென்னை மாகாண சர்க்கார் அவசர அவசரமாக அமுலுக்குக் கொண்டு வந்தார்கள்.

அதிலும், மருந்துகள் முதலிய ஜீவாதாரமான பொருள்களின் 'கண்ட்ரோல்'களை எடுத்துக் கொள்ளை லாபம் அடிக்கும்படி விட்டுவிட்டு, அவசியமில்லாத 'கண்ட்ரோல்'களையும் ஏழை விவசாயிகளைத் தொல்லைப் படுத்தக் கூடிய 'கண்ட்ரோல்'களையுமே அதிகமாக ஏற்படுத்தினார்கள்.

உதாரணமாக, கருப்பட்டிக்கும் (பனை வெல்லம்) தேங்காய்க்கும் 'கண்ட்ரோல்' ஏற்படுத்தி விவசாயிகளின் தலையில் கை வைத்தார்கள்!

மேற்படி பொருள்களின் விற்பனைக்குப் 'பெர்மிட்' பெற்ற அதிர்ஷ்டசாலிகள்

வெகு சொற்ப காலத்தில் கொள்ளைப் பணக்காரர்கள் ஆனார்கள்.

இம்மாதிரியான 'கண்ட்ரோல்' 'பெர்மிட்' முறை ஊழல்களிலும், அவற்றின் லாபத்திலும் ஆங்காங்கு சில எம். எல். ஏ.க்களும் பங்கு பெறுகிறார்கள் என்னும் பேச்சுப் பரவி, பொது மக்களுக்குக் காங்கிரஸின் பேரிலேயே வெறுப்பு உண்டாகக் காரணம் ஆயிற்று.

மேற்படி நிலைமை காரணமாக, உத்தியோக வர்க்கத்தின் ஊழல்களும் பல்கிப் பெருகின.

பெரிய சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களில் 'கிம்பளம்' வாங்கிப் பழக்கப்பட்டவர்களின் பாடு கொண்டாட்டமாயிற்று. நேர்மையும் திறமையும் உள்ள பெரும்பாலான உத்தியோகஸ்தர்களுக்குச் சர்க்காரிடமே மதிப்பு இல்லாமல் போய்விட்டது.

"காங்கிரஸ் மந்திரிகளைக் கேளுங்களேன்!" என்றும், "உங்கள் மந்திரி சபையின் இலட்சணம் இப்படி!" என்றும் பெரிய உத்தியோகஸ்தர்கள் பேசுவது சர்வ சகஜமாய்ப் போய்விட்டது.

இவ்விதம் பெருகிக்கொண்டு வந்த லஞ்ச ஊழல்களையும், அதிகாரிகளின் அலட்சிய பாவத்தையும் நிவர்த்திப்பதற்குப் பிரகாசம் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்குப் பதிலாகப் பொது ஜனங்களுக்குள்ளேயே எந்தப் பகுதியார் தலையில் கையை வைக்கலாம், யாரைத் தொந்தரவுக் குள்ளாக்கலாம் என்று பார்க்கத் தொடங்கினார்கள்!

தலை முறை தலைமுறையாக வியாபாரத் துறையில் ஈடுபட்டு வந்திருக்கும் லட்சக் கணக்கான வியாபாரிகளை அடியோடு ஒழித்து விட்டு, அவர்களை நம்பிப் பிழைக்கும் லட்சக் கணக்கான கடைக் குமாஸ்தா முதலியவர்களைத் தெருவில் விட்டுவிட்டு, சாமான் விற்கவும் வாங்கவும் கோ - ஆபரேடிவ் சங்கங்களை ஆரம்பிக்கும் திட்டம் ஒன்று போட்டார்கள்.

பொது ஜனங்கள் ஒரு தனிப்பட்ட வியாபாரியின் கடைக்குப் போனால், அந்த வியாபாரி ஒரு அணாவோ இரண்டணாவோ அதிக விலை சொன்ன போதிலும், வந்தவர்களிடம் மரியாதையாகப் பேசி உட்கார வைத்துத் திருப்பி அனுப்புவார்.

ஆனால் கோ - ஆபரேடிவ் சங்கக் கடைகளிலோ, சாமான் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், நிச்சயமாக அவமரியாதை கிடைக்கும் என்று ஜனங்கள் எதிர்பார்க்கலாம்!

இப்போதே இப்படி இருக்கும்போது, தனிப்பட்ட வியாபாரிகள் அடியோடு இல்லாமற் போனால், கூட்டுறவுச் சங்கக் கடைகளில் சாமான் வாங்கப் போவோரின் கதியைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

அவசியமான சாமான்களுக்கு மட்டும் 'கண்ட்ரோல்' ஏற்படுத்துவதும், அப்படி ஏற்படுத்தும் 'கண்ட்ரோல்' விதிகளைச் சரிவர அமுல் நடத்துவதும், 'கறுப்பு மார்க்கெட்' வியாபாரத்தை அடியோடு ஒழிப்பதும் தற்காலத்தில் சர்க்கார் செய்ய வேண்டிய அவசியமான காரியங்களாகும். இந்தக் காரியங்களைத் திறமையாகச் செய்யக் கையினால் ஆகவில்லை என்பதற்காக, வியாபாரிகளையே அடியோடு ஒழித்து விடுகிறோம் என்று ஆரம்பிப்பது பேதமைச் செயலாகும்.

* * *

மேலே சொன்னது போன்ற காரியங்களினால் ஸ்ரீ பிரகாசம் மந்திரி சபையிடம் பொது மக்களின் அதிருப்தி வளர்ந்து வருவதையும், காங்கிரஸையே ஜனங்கள் குற்றங் கூறத் தொடங்கி யிருப்பதையும், பொதுஜனப் பிரதிநிதிகள், அதாவது எம். எல். ஏ.க்களில் பலர் கண்டார்கள்; நாளுக்கு நாள் நன்றாகக் கண்டு வந்தார்கள்.

ஆயினும் பிரகாசம் மந்திரி சபையை ஒழிப்பதற்கு இலேசில் அவர்கள் முன் வரவில்லை.

இதற்கு முதலாவது காரணம், மகாத்மாவின் ஆசியை ஸ்ரீ பிரகாசம் பெற்றிருக்கிறார் என்பது. இரண்டாவது காரணம் பிரகாசம் மந்திரி சபையைப் போக்கி விட்டால் அடுத்தபடி வருவது இரட்டைப்[illegible] மந்திரி சபையாக இருக்கப் போகிறதே என்னும் கவலை.

மேலிடத்தின் ஆதரவும் பக்க பலமும் பெற்று நடக்கும் மந்திரி சபைதான் திறமையாக வேலை செய்ய முடியும் என்பது சில எம். எல். ஏ.க்களின் திடமான கொள்கையாக இருந்தது. கடைசியாக, அந்தக் கொள்கை வெற்றி பெற்றது.

பிரகாசம் மந்திரி சபையைப் போக்கி விட்டுப் பிறகு மேலிடத்தின் யோசனைப்படி வேறு மந்திரி சபை அமைக்கப் பெரும்பாலான காங்கிரஸ் எம். எல். ஏ.க்களும், எம். எல். ஸி.க்களும் ஒப்புக்கொண்டார்கள்.

அதன் விளைவாக பிப்ரவரி 28உ சுப யோக சுபகால சுபலக்னத்தில் சென்னைச் சட்டசபைகளின் காங்கிரஸ் கட்சிக் கூட்டம்

கூடியது. பிரதம மந்திரி பிரகாசத்தின் மீது நம்பிக்கை யில்லை யென்ற தீர்மானமும் வந்தது.

இது ரொம்பக் கேவலமான காரியந்தான். "சென்னை மாகாணத்தைப் பார்த்துப் பிற மாகாணங்கள் சிரிக்கும்படியான காரியம்; சென்னை மாகாணத்துப் பொதுஜனங்களே கொஞ்சம் வெட்கப்பட்டுக் கொண்டு சிரிக்க வேண்டிய காரியம்" என்றெல்லாம் சொன்னாலும் மிகையாகாது.

ஆயினும் 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்னும் முதுமொழியின்படி ஒரு வருஷத்துக்கு முன்னால் நமது பிரதிநிதிகளான எம்.எல்.ஏ.க்கள் செய்த தவறு காரணமாக இந்த அவமானத்தை இப்போது நாம் அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது. அதை அனுபவித்தே தீரவேண்டும்; வேறு வழியில்லை.

* * *

"சென்னையில் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டது; ஒரு வருஷத்துக்குள் அது கலைந்தது" என்பதே நகைப்புக்கிடமான காரியம்தான். ஆனால் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வந்த பிறகு ஸ்ரீ பிரகாசம்காரு நடந்துகொண்ட முறையும் அவர் செய்த காரியங்களுமே, பதின்மடங்கு இந்த மாகாணத்தைக் கேவலப்படுத்தி நகைப்புக்கும் உள்ளாக்கி யிருக்கின்றன.

"நம்பிக்கை யில்லைப் பிரேரணை"யைப் பற்றிப் பேச்சு வந்தவுடனேயே ஸ்ரீ பிரகாசம்காரு ராஜிநாமா செய்து, அதை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தைக் கட்சிக் கூட்டத்தின் முடிவுக்கு விட்டிருக்க வேண்டும்.

அங்கத்தினர் 114 பேர் கையெழுத்துப் போட்ட செய்தி தெரிந்தவுடனேயாவது ராஜிநாமா செய்திருக்க வேண்டும்.

அதற்குப் பதிலாக ஸ்ரீ பிரகாசம்காரு ஆந்திர மாகாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்யத் தொடங்கிக் கையொப்பமிட்ட அங்கத்தினரைப் பலவிதமாகப் பயமுறுத்தத் தொடங்கினார்.

பிப்ரவரி 28உ கட்சிக் கூட்டம் கூடிய பிறகாவது தம்முடைய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் முறையில் நடந்து கொண்டாரா என்றால், அதுவும் இல்லை!

விதிகளின் பின்னால் மறைந்து நின்று கொண்டு, "தீர்மானமே கொண்டுவரக் கூடாது" என்று தடை உத்தரவு போட்டார்.

அதற்குப் பிறகு அவரைச் சேர்ந்தவர்கள் கூட்டத்தை விட்டுப் போனபோது அவரும் போகாமல் இருந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தார்.

அவரிடம் நம்பிக்கையில்லாத 134 பேரும் வேறொரு நாற்காலி கொண்டு வந்து போட்டு, வேறொரு அக்கிராசனரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு நம்பிக்கை யில்லாத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றியதைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

ஸ்ரீ பிரகாசம்காரு இவ்வளவுக்குப் பிறகாவது ஒரு ராஜிநாமாக் கடிதத்தை எழுதி, மேலிடத்திலிருந்து வந்திருந்த ஸ்ரீ சங்கர ராவ் தேவிடம் கொடுத்து, "இனிமேல் உங்கள்பாடு!" என்று சொல்லி யிருந்தால், பாதி கௌரவத்தையாவது காப்பாற்றிக் கொண்டிருக்கலாம்.

அப்படியும் அவர் செய்யவில்லை!

இன்னும் பிரதம மந்திரி பதவி வகித்துச் சட்டசபைக் கூட்டத்தில் பட்ஜெட்டும் சமர்ப்பிக்கிறார்.

ஐந்து மந்திரிகளின் ராஜிநாமாக்களை ஒப்புக்கொண்டு அவர்கள் வகித்த இலாக்காக்களை மற்றவர்களிடம் பிரித்துக் கொடுக்கிறார்!

சட்ட சபையில் எதிர்க் கட்சி அங்கத்தினர்களின் ஏகத்தாளங்களை யெல்லாம் சிவனே என்று பொறுத்துக் கொண்டிருக்கிறார்.

மார்ச்சு மாதம் 30உ கட்சிக் கூட்டம் வைத்திருப்பதாக அறிவிக்கிறார்!

ஓ கடவுளே! இந்தப் பதவி மோகம் என்பது மிகப் பொல்லாத காரியந்தான்! எப்பேர்ப்பட்ட பழைய தேச பக்தரை இவ்வளவு கேவலமான நிலைமைக்குப் பதவி மோகம் கொண்டு வந்து விட்டது!

இன்னும் ஒரு வாரமோ, இரண்டு வாரமோ அல்லது ஒரு மாதமோதான் அந்தப் பிரதம மந்திரி பதவியை வகிக்கா விட்டால் என்ன?

பிராயம் மிகுந்தவரும், தம்முடைய காலத்தில் எவ்வளவோ தீரமான காரியங்களைச் செய்தவரும், சிறந்த தியாகியுமான ஸ்ரீ பிரகாசம்காருவின் தற்போதைய நிலைமைக்கு நாம் பெரிதும் வருந்துகிறோம்.

அவரை இந்த நகைப்புக்குரிய நிலைமையில் அதிக காலம் விட்டு வைக்காமல் மேலேயுள்ள தலைவர்கள் விரைவில் தக்க நடவடிக்கை எடுத்து ஸ்ரீ பிரகாசம் காருவையும் இந்த மாகாணத்தையும் காப்பாற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

ஓட்டுப் போட்டோம்!

1. மஞ்சள் நிறப் பெட்டியிலே
ஓட்டுப் போட்டோம்—காந்தி
மவராஜன் பேரைச் சொன்ன
தாலே போட்டோம்—அந்தத்
தங்க நிறப் பெட்டியிலே
ஓட்டைப் போட்டோம்—காந்தி
தாத்தா பேரைச் சொன்னதாலே
தானே போட்டோம்!

2. காந்தியே தலைவருன்னு
கூச்சலிட்டாங்க—காங்கிரஸ்
காரியக்க மிட்டியைத் தான்
தூக்கி வைச்சாங்க—கையில்
ஏந்திடுவோம் சத்தியத்தை
இன்னு சொன்னாங்க—காந்தி
இட்ட கோட்டைத் தாண்டோமின்னு
ஆணை யிட்டாங்க!

3. ஓட்டுக்களை வாங்கிக்கின்னு
ஓடிப் போறாங்க—ஒரு
கூட்டமாகப் பட்டணத்தில்
கூடிக் கின்னாங்க—ஆசாத்
கேட்டுகின்ன கோரிக்கையைத்
தள்ளிப் பிட்டாங்க—இனிக்
கேள்விமுறை இல்லை இன்னு
எண்ணிக் கிட்டாங்க!

4. தானடிச்ச ஸூப்பமாக
நடந்துக் கிட்டாங்க—காந்தி
தாத்தாவுக்கு இதிலே யென்ன
உரிமை யின்னாங்க—இனித்
தாங்களே தலைவருன்னு
தமுக் கடிச்சாங்க—போடு
தடிங்கிணத்தோ மின்னு சொல்லிக்
குதிக்கக் கிட்டாங்க!

5. மந்திரியைத் தேர்ந்தெடுத்து
மாலை யிட்டாங்க—காந்தி
மவாத்துமா மனசு கோண
நடந்துக் கிட்டாங்க—ரொம்பத்
தந்திரி போல் செஞ்சுபிட்டோம்
இன் னிருந்தாங்க—அந்தத்
தந்திரம் பலிக்க லைன்னு
கண்டு கொண்டாங்க!

6. கண்ட கண்ட திட்டங்களை
அவுத்து கிட்டாங்க—ஐயா!
கட்சி கட்டி நின்னுக்கிட்டு
வேலை செஞ்சாங்க—இப்போ
சண்டை ரொம்பக் கிளப்பிக்கிச்சி
என்ன செய்வாங்க—பாவம்
சந்தி எல்லாம் சிரிக்குதுன்னு
தெரிஞ்சுக் கிட்டாங்க!

7. இனியாச்சும் நல்ல காலம்
பொறந்திடுமான்னு—எங்கும்
ஏழைமக்கள் ஏங்கி நின்னு
பேசிக் கிருங்க!—அந்தப்
புண்ணிய பாத்மா ராஜாஜி
வந்திட னுமே—வந்தால்
புள்ளை குட்டி பொஞ்சாதி
பொழைக்கப் போகுமே!

—"நாட்டுக் கவிராயர்"

அக்கப் போர்

"சக்கைப்போடு"

"ராஷ்டிரபதி கிருபளானிக்கு இந்த எம். எல். ஏ.க்கள் என் மகஜர் அனுப்ப வேண்டும்? கிருபளானி என்னுடைய ஏஜெண்டோ குமாஸ்தாவோ அல்லது என்னுடைய பிரதிநிதியோ அல்லவே!" என்று ஸ்ரீ பிரகாசம்காரு பெஜவாடாவில் கூறினாராம்.

"இந்த விஷயத்தில் ராஷ்டிரபதி கிருபளானியைப்போல நானும் அதிர்ஷ்டசாலி தான்; பிரகாசம்காருவின் ஏஜெண்டாகவோ குமாஸ்தாவாகவோ பிரதிநிதியாகவோ நானும் ஸ்தானம் வகிக்கவில்லை" என்று சாவடிக் குப்பம் கிராம ராட்சதபதி ஓர் அவசர அறிக்கை விட்டிருக்கிறார்!

★

ஸ்ரீ டி. பிரகாசம் அவர்களிடம் நம்பிக்கை யில்லை என்ற அறிக்கையில் சட்டசபை அங்கத்தினர் 114 பேர் கையெழுத்துப் போட்டிருந்தார்கள் அல்லவா? "பலவீனமான சில சட்டசபை அங்கத்தினரைக் கட்டாயப்படுத்திக் கையெழுத்து வாங்கி விட்டார்கள்!" என்று கோகலே மண்டபத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் புகார் சொல்லப்பட்டதாம்.

"அதெல்லாம் கிடையவே கிடையாது. எனக்குக் கையெழுத்துப் போடத் தெரியும் என்பதை நிரூபிப்பதற்காகவே நான் கையெழுத்துப் போட்டேன்!" என்று ஒரு வஸ்தாது எம். எல். ஏ. மறுப்புரைக்கிறார்.

★

"முன்னேறிப் போவதா, பின்னால் போவதா என்ற பிரச்னையை நாம் யோசிக்க வேண்டியதாயிருக்கிறது!" என்று இந்திய மந்திரி லார்ட் பெத்விக் லாரென்ஸ் பிரபுக்கள் சபையில் கூறினாராம்.

"பின் வாங்காதீர்!" என்று நாம் 1942-ம் வருஷத்திலேயே ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸுக்குச் சொன்ன யோசனையைப் பின்பற்றியிருந்தால், இப்போது இந்த மாதிரி யோசனைக்கே இடம் ஏற்பட்டிராது.

"மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்குச் சௌகரியம் செய்து கொடுப்பதற்காக ஒரு கோடி ரூபாய் செலவு செய்யப் போகிறோம்!" என்று ரயில்வே மந்திரி டாக்டர் மத்தாய் தெரிவித்த செய்தி பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

"சௌகரியங்கள், மூன்றாம் வகுப்புப் பிரயாணிக்கா? பிராணிக்கா? நன்றாய்ப் பார்க்கவும்!" என்று திருவாளர் மூட்டைப் பூச்சியார் கேட்டுக் கொள்கிறார்.

★

மேலும் ரயில் வண்டிகளில் முதல் வகுப்பை அடியோடு எடுத்துவிடப் போவதாக டாக்டர் மத்தாய் தெரியப்படுத்தி விட்டு, "இனிமேல் இரண்டாம் வகுப்பு முதல் வகுப்பாகவும், இண்டர் வகுப்பு இரண்டாம் வகுப்பாகவும், மூன்றாம் வகுப்பு மூன்றாம் வகுப்பாகவும் இருக்கும்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இதிலே கூட மூன்றாம் வகுப்பின் துரதிர்ஷ்டத்தைப் பாருங்கள்! இரண்டாம் வகுப்புக்கும் இண்டர் வகுப்புக்கும் 'பிரமோஷன்' கிடைத்திருக்கிறது. மூன்றாம் வகுப்போ, பழையபடி மூன்றாம் வகுப்பாகவே இருக்கிறது!

★

கோகலே மண்டபத்தில் ஸ்ரீ பிரகாசத்தை ஆதரிப்பதற்காக நடந்த பொதுக் கூட்டத்தில், ஸ்ரீ நாஸா சுப்பராவுக்கும் ஸ்ரீ என். எஸ். வரதாச்சாரிக்கும் வாக்கு வாதம் நடந்தது.

"ஆயிரம் வரதாச்சாரிகளால் கூட என்னைப் பயமுறுத்திவிட முடியாது!" என்றார் ஸ்ரீ நாஸா சுப்பராவ்.

"ஆயிரம் சுப்பராவ்களுக்குக் கூட நான் பயந்துவிட மாட்டேன்!" என்றார் ஸ்ரீ வரதாச்சாரியார்.

ஆனால் மேடையில் ஒரே ஒரு சுப்பராவும், ஒரே ஒரு வரதாச்சாரியாரும் சண்டை போட்டுக் கொண்டபோது, பாவம்,

போலீஸ்காரர்கள்தான் ரொம்பவும் பயந்து போனார்கள்!

எங்கேயோ மூலையில் இருந்தவர்கள் சடசடவென்று மேடைக்கு ஓடி வந்து சண்டையை விலக்கி விட்டார்கள்! வெறும் பயந்தாங்கொள்ளிகள்!

★

இத்தாலி தேசத்தில் உள்ள எட்னா எரிமலை சென்ற வாரத்தில் நெருப்பைக் கக்க ஆரம்பித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இந்தியா தேசத்தில் எவ்வளவோ அதிசயங்கள் இருந்தபோதிலும், எரிமலை மட்டும் கிடையாது. எனவே, நாம் ஸ்ரீ கே. ஆர். காரந்தையும் ஸ்ரீ என்.ஜி. ரங்காவையும் பார்த்துத் திருப்தி அடைய வேண்டியதுதான்!

★

“எல்லாப் பத்திரிகைகளும் எனக்கு விரோதமாயிருக்கின்றன!” என்று ஸ்ரீ பிரகாசம்காரு ஆந்திர நாட்டில் தமது சூறாவளிச் சுற்றுப் பிரயாணத்தின்போது குறை கூறினாரல்லவா?

இது ஸ்ரீ பிரகாசத்தினுடைய தனிப்பட்ட அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும்!

ஒரு காலத்தில் ஸ்ரீ பிரகாசம்காரு தாமே ஒரு பத்திரிகைக்குச் சொந்தக்காரராயும் பத்திரிகாசிரியராயும் இருந்து நடத்தி வந்தார். “ஸ்வராஜ்யா” என்னும் பெயருடைய அந்தப் பத்திரிகையே ஒரு சமயம் ஸ்ரீ பிரகாசத்துக்கு விரோதமாக எழுதிற்று. அதாவது ஸ்ரீ பிரகாசம்காரு தமது சுற்றுப் பிரயாணப் பிரசங்கங்களில் வெளியிட்ட அபிப்பிராயங்களுக்கு நேர்விரோதமாக, “ஸ்வராஜ்யா”வின் தலையங்கங்கள் வெளியாயின.

ஸ்ரீ பிரகாசம்காரு சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு வெகு கோபமாகத் திரும்பிச் சென்னைக்கு வந்தார். துணை ஆசிரியரை அழைத்துக் கேட்டார்! துணை ஆசிரியர், “உங்களுடைய அபிப்பிராயத்தை நீங்கள் வெளியிட்டீர்கள்; என்னுடைய அபிப்பிராயத்தை நான் எழுதினேன்!” என்றார்.

ஸ்ரீ பிரகாசம் உடனே துணை ஆசிரியரை வேலையை விட்டுப் போகும்படி சொன்னார். அரை மணி நேரத்துக்கெல்லாம் மறுபடியும் கூப்பிட்டு அனுப்பி, “உம்முடைய தைரியத்தைப் பாராட்டுகிறேன். வழக்கம்போல் வேலையைப் பார்க்கவும்!” என்று தெரிவித்தார்.

ஸ்ரீ பிரகாசம்காரு மேலே சொன்னது போன்ற பெருந்தன்மையான காரியங்களைச் செய்யக் கூடியவர்தான். ஆனால் அவருக்கு எப்போதும் அதிர்ஷ்டந்தான் கட்டை!

★

மேற்படி சம்பவத்தில், “என் அபிப்பிராயத்தை நான் எழுதினேன்” என்று சொன்ன “ஸ்வராஜ்யா” துணை ஆசிரியர் யார் தெரியுமா? ஸ்ரீ பிரகாசத்துக்குப் பரிந்து சமீபத்தில் பிரமாத வீரப் போராட்டம் நடத்திய “சுதந்திரா” ஆசிரியர் ஸ்ரீ காஸா சுப்பராவ்தான்!

இப்போது நடந்து முடிந்த மந்திரி சபைப் போராட்டத்தில் ஸ்ரீ காஸா சுப்பராவின் போக்கை நாம் ஆதரிக்க முடியவில்லை. ஆயினும் அவருடைய தைரியத்தைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

★

“கிணற்றுக்குப் பாதி பணம்”

மேற்படி தலைப்பின் கீழ், விவசாயத்துக்காக வெட்டப்படும் கிணறுகளுக்குச் சென்னை சர்க்கார் செலவில் பாதி கொடுப்பார்கள் என்ற செய்தி வெளியாகி இருக்கிறது.

பொருத்தமான காரியந்தான். சென்னைப் பிரகாசம் சர்க்கார் இதுவரை செய்திருக்கும் காரியங்கள் எல்லாம் பாதிக் கிணறு தாண்டுவதாகவே இருந்து வருகின்றன அல்லவா?

★

“யாரோ ஒரு மந்திரி தமக்கு மருமகப் பிள்ளையாய் வரப் போகிறவருக்குப் பெரிய சர்க்கார் உத்தியோகம் பண்ணிக் கொடுத்தது உண்மையா?” என்று சென்னைச் சட்ட சபையில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

மேற்படி விஷயம் உண்மையாயிருந்தாலும் இல்லாமற் போனாலும், நமது மாஜி கல்வி மந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் அவர்களை இது விஷயமாக யாரும் சந்தேகிக்க மாட்டார்கள் என்று உறுதி கூறுகிறோம்.

நவகாளி யாத்திரை

சாவி

உபமேயப் பொருத்தம்

தர்மாபூருக்குச் சென்று கொண்டிருந்தபோது இடையே மகாத்மாஜியின் பிரயாணம் சிறிது நேரம் தடைப்பட்டது. வழியில் ஒரு முஸ்லிம் குடியானவர் காந்தி மகாத்மாவை எதிர்கொண்டு அழைத்துத் தம்முடைய குடிசைக்கு முன்னால் உட்கார வைத்தார். பாபுஜிக்குப் பழம், மாலை முதலியவைகளைக் கொண்டு உபசாரம் செய்தார். மகாத்மாஜி சுற்றி நின்ற சிறுவர்களுக்கு அந்தப் பழங்களை ஒவ்வொன்றாக விநியோகம் செய்தானதும் குடியானவரிடம் விடை பெற்றுக் கொண்டார். அப்போது அந்த முஸ்லிம் குடியானவர் தம் கையிலே வைத்திருந்த ஒரு சிறு செடியைச் சட்டென்று மகாத்மாவிடம் நீட்டினார். அந்தச் செடியின் ஒரு கிளையில் அகன்று நீண்ட இலைகளும், மற்றொரு கிளையில் சின்னஞ்சிறு வேறு ஜாதி இலைகளும் காணப்பட்டன. ஒரே செடியில் இரண்டு விதமான இலைகள் இருக்கும் அதிசயத்தைக் கண்ட எங்களுக்கெல்லாம் பரம ஆச்சரியமாயிருந்தது. இதற்குள் அந்த முஸ்லிம் குடியானவரே மகாத்மாஜியிடம் மேற்படி அதிசயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

"ஒரே செடியில் இரண்டு ஜாதி இலைகள் வளர்வது எப்படி?" என்று அவர் மகாத்மாவைக் கேட்டார்.

காந்தி மகான் கண நேரமும் தாமதிக்காமல் அந்தக் கேள்விக்குப் பளிச்சென்று பதில் கூறினார்:

"இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை; இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய நீதி ஒன்று இருக்கிறது. இவை எப்படி வெவ்வேறு ஜாதி இலைகளாயிருந்தும் ஒரே செடியில் ஒற்றுமையாக வளர்கின்றனவோ, அப்படியே ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே இடத்தில் இருந்து ஒற்றுமையாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

மகாத்மாவின் மேற்படி பதிலைக் கேட்ட அந்தக் குடியானவருடைய முகத்திலே பரம திருப்தி காணப்பட்டது.

மூங்கில் பாலம்

குடியானவருடைய வீட்டிலிருந்து கிளம்பித் தர்மாபூருக்குச் செல்லுவதற்குள் வழியில் சுமார் எட்டு மூங்கில் பாலங்களைக் கடக்க வேண்டியிருந்தது. நவகாளி ஜில்லாவில் வயலுக்கு நீர் பாய்ச்சும் வாய்க்கால்கள் குறுக்கும் நெடுக்கும் காணப்படுகின்றன. அந்த வாய்க்கால்களைக் கடந்து செல்லுவதற்காக மூங்கில்களினால் பாலம் அமைத்திருக்கிறார்கள். இந்தப் பாலங்களில் நடந்து செல்லுவதென்றால் அதற்குத் தனிப்பட்ட சாமர்த்தியமும் விசேஷப் பயிற்சியும் வேண்டியிருக்கிறது.

இதைக் கேள்விப்பட்டிருந்த காந்திஜி, ஸ்ரீ ராம்பூரில் ஒரு மாத காலம் முகாம் போட்டிருந்த சமயம் தினசரி ஒரு மூங்கில் பாலத்தின் மீது நடந்து நடந்து பயிற்சி பெற்றுக் கொண்டாராம். கைக்கோலை ஊன்றிக்கொண்டும், கைக்கோல் இல்லாமலும் நடப்பதற்குப் பழக்கம் செய்து கொண்டாராம். அந்தச் சமயத்தில் பண்டித ஜவாஹரும் இன்னும் சிலரும் மகாத்மாஜியிடம் அரசியல் சம்பந்தமான சில அந்தரங்க ஆலோசனைகளைக் கேட்பதற்காக ஸ்ரீராம்பூருக்கு வந்திருந்தார்கள். காந்திஜி அப்போது மூங்கில் பாலத்தில் நடந்து செல்லும் வித்தையை அவர்களுக்கும் காட்டினார். ஜவாஹர் அதைப் பார்த்துவிட்டு, "பூ! இவ்வளவுதானா?" என்பதைப்போல் சிரித்தார்.

காந்திஜி ஜவாஹரைப் பார்த்து "தாங்கள் நினைக்கிறபடி இது அத்தனை சுலபமில்லை; நடந்து பார்த்தால்தான் இதன் கஷ்டம் தெரியும்" என்றார்.

உடனே ஜவாஹர், "இதோ பாருங்கள்" என்று கச்சத்தைக் கட்டினார். கைச் சட்டை விளிம்புகளை மடக்கி விட்டுக் கொண்டார். சட்டென்று ஒரு கந்து பாய்ந்து அந்த வாய்க்காலை ஒரே தாண்டாகத் தாண்டிக் காட்டினார்!

இதைப் பார்த்த மகாத்மாஜி மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்பட்டுப் போனாராம்!

மேற்படி சம்பவத்தை நாங்கள் ஒரு பாலத்தைக் கடக்க நேரிட்டபோது எனக்கு ஒருவர் ஞாபகப்படுத்தினார்.

"வாஸ்தவம்தான்; நவகாளி என்னும் இலங்கைத் தீவிலே, சமரசம் என்ற ஸீதையை அடைவதற்காக ராமன் அணை கட்டியது போல் காந்திஜியும் மூங்கில் பாலம் அமைத்து கடந்து செல்கிறார். ஆனால் ஜவாஹரோ ஹனுமானைப் போல் ஒரே தாவாகத் தாவி விட்டார். ரொம்பவும் பொருத்தமாய்த்தான் இருக்கிறது" என்று அவருக்குப் பதில் கூறினேன்.

ரொட்டி பேரம்!

ஸ்ரீராமபூர் கிராமத்து ஜனங்கள் மகாத்மாவின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துத் தோப்புக்கு வெளியே உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தார்கள்.


அப்போது காலை மணி எட்டுக்கூட அடிக்கவில்லை. காந்திஜி தாம் செல்ல வேண்டிய வழியை விட்டுவிட்டு அருகிலிருந்த ஒரு சிறு ரொட்டிக் கடையின் சமீபம் சென்றார். அந்தக் கடைக்காரர் காந்தி மகாத்மாவைக் கண்டு பயபக்தியுடன் எழுந்து நின்றார். அந்தக் கடையிலிருந்த ஒரு முழு ரொட்டியை மகாத்மா கையிலெடுத்துக் கொண்டார்.

"ஐயோ, மகாத்மாவுக்கு நல்ல பசி போலிருக்கிறது; அதனாலேதான் ரொட்டியை எடுத்துச் சாப்பிடப் போகிறார்" என்றார்கள் சுற்றி யிருந்தவர்கள்.

காந்தி மகான் அந்த ரொட்டிக் கடைக்காரரைப் பார்த்து, "இந்த ரொட்டி என்ன விலை?" என்று கேட்டார்.

முதலில் மேற்படி கடைக்காரர் விலை சொல்ல மறுத்து, பசியோடு வந்திருக்கும் மகாத்மாவுக்கு அதை இனாமாகக் கொடுக்க விரும்பினார்.

மகாத்மாஜி, "விலையைச் சொல்லும்" என்று அழுத்தமாகக் கேட்கவே, அவர் தயங்கிக்கொண்டே 'ஓர் அணா' என்று பதில் கூறினார்.



"எல்லோருக்கும் ஓர் அணாவுக்குத் தான் விற்கிறீரா, அல்லது எனக்கு மட்டும் குறைத்துச் சொல்லுகிறீரா?" என்று கேட்டார் மகாத்மா.

"எல்லோருக்கும் விற்கும் விலைதான்" என்றார் கடைக்காரர்.

மகாத்மா ரொட்டியைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். "இது ரொம்பச் சின்ன ரொட்டி. ஆகையால் இதற்கு அரையணாத்தான் கொடுக்கலாம். நீர் அதிக லாபம் வைத்து விற்கிறீர். கிராமத்து ஜனங்கள் இவ்வளவு விலை கொடுத்து வாங்குவதற்குச் சக்தியற்றவர்கள்" என்று சொல்லி ரொட்டியை அவரிடமே திருப்பிக் கொடுத்து விட்டுத் திரும்பினார்.

பாவம்! ரொட்டிக் கடைக்காரருக்கு இது ஒரு பெரிய ஏமாற்றமாய்ப் போயிருக்க வேண்டும்.

கிராமத்தின் பொருளாதார நிலைமைக்கு ஏற்ற வகையில் வியாபாரம் நடக்கிறதா என்பதைச் சோதிப்பதற்காகவே மகாத்மா மேற்படி ரொட்டியை விலை கேட்டிருக்க வேண்டும் என்பது அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தின்போது ஊர்ஜிதமாயிற்று. அன்றைய மாலைப் பிரசங்கத்தில் பொதுவாக கிராம வாசிகளுக்கு உபயோகமான விஷயங்களைப் பற்றியே அதிகம் பேசினார். கிராமத்தைச் சுகாதார ரீதியாக வைத்துக் கொள்வதெப்படி? தெருக்களைக் கூட்டிச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் விதம், நீர்த் தேக்கங்களைப் பாழாக்காமல் குடிதண்ணீராக உபயோகிக்கும் முறை முதலியவைகளை விரிவாக எடுத்துச் சொன்னார். காலையில் ரொட்டி விலை விசாரித்ததைப் பற்றியும் பிரஸ்தாபித்து வியாபாரிகள் அதிக லாபம் வைக்காமல் உணவுப் பொருள்களை ஏழை மக்களுக்கு நியாயமான விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

பிறகு, தம்முடைய சாதன வாழ்க்கையைக் குறித்துச் சிறிது நேரம் பேசினார். "இம்மாதிரி வாழ்க்கை நடத்த ஒரு சிலரால் தான் சாத்தியம். ஆகையால் என்னை யாரும் கண் மூடித்தனமாகப் பின்பற்ற வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டார். ஆனாலும் நான் மகாத்மாஜியை ஒரே ஒரு விஷயத்தில்தான் கண்மூடித்தனமாகப் பின்பற்றினேன். அதாவது, காந்திஜி பிரார்த்தனை வேளைகளில் கண்களை மூடித் தியானம் செய்தபோது, நானும் அவரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றினேன்!

அன்றாட அலுவல்கள்

மகாத்மாஜியின் அன்றாட அலுவல்கள் என்னவென்பதைத் தெரிந்து கொள்வது தர்மாபூரில் சாத்தியமாயிற்று.

காலையில் மகாத்மாஜி யாத்திரை முடிந்து மற்றொரு கிராமத்துக்கு வந்ததும் ஸ்நானத்துக்குத் தயாராகிவிடுகிறார். கிராமங்களில் ஸ்நான அறை என்று பிரத்யேகமாக ஏதும் கிடையாதாகையால், போகுமிடங்களிலெல்லாம் திரைகள் கட்டி ஸ்நான அறை தயார் செய்து விடுகிறார்கள். மகாத்மாஜி அந்த விடுதிக்குள் நிதானமாக ஸ்நானம் செய்கிறார். பின்னர், சற்று நேரம் பத்திரிகைகளைப் படிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டே தூங்கிப் போய்விடுகிறார். ஓய்வு கிடைக்கும் நேரங்களில் நூல் நூற்கிறார்.

பகலில் சுமார் இரண்டு மணிக்குக் கிராமத்து ஸ்திரீகளைக் கூட்டி ராமாயணம், பாரதம் முதலிய புராணங்களைச் சொல்லி அந்தக் கதைகளிலுள்ள நீதியைப் போதிக்கிறார்.

பிறகு ஒவ்வொரு கிராமத்திலும் நடந்த அட்டூழியங்களையும், அக்கிரமங்களையும் பற்றி நேரில் பார்த்து விசாரித்து அறியும் பொருட்டு வெளியே கிளம்பிச் செல்கிறார். அங்கங்கே கிராமவாசிகள் தாங்கள் பட்ட கஷ்டங்களைக் காந்தி மகானிடம் கதை கதையாகச் சொல்லிக் கண்ணீர் வடிக்கிறார்கள். எரிந்துபோன குடிசைகளைக் காண்பித்துக் கதறுகிறார்கள். மற்றும் எழுத்தால் வர்ணிக்க இயலாத பல கோர சம்பவங்களைக் குறித்து மகாத்மாவிடம் மனம் விட்டுப் பதறுகிறார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள குருடர்கள், ஏழை எளியவர்கள், வயது சென்ற விருத்தாப்பியர்கள் அனைவரும் மகாத்மா வந்திருக்கும் செய்தி கேள்விப்பட்டு அவருடைய தரிசனம் பெறவும் ஸ்பரிசித்து மகிழவும் ஆவலுடன் விரைந்து வருகிறார்கள். மகாத்மா அவர்களையெல்லாம் அன்புடன் தடவிக் கொடுத்து ஆசிர்வாதம் செய்கிறார்.

இதைக் கண்டபோது, "இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பாக ஏசுநாதர் ஊர் ஊராக விஜயம் செய்தபோது இப்படித்தான் குருடர்களும் செவிடர்களும் ஏசு பகவானுடைய ஸ்பரிசம் பெற்று ஜன்ம சாபல்ய மடைந்தார்கள்" என்று சரித்திரத்தில் படித்த விஷயம் எனக்கு ஞாபகம் வந்தது.

ஸ்மசானக் காட்சி

தர்மாபூருக்குச் சமீபத்தில் பல பயங்கர சம்பவங்கள் நடந்ததாம். அத்தகைய ஒரு பயங்கரப் பிரதேசத்தை மகாத்மா நேரில் வந்து பார்க்கவேண்டும் என்று சொல்லி மகாத்மாவை அங்கே அழைத்துச் சென்றார்கள். கிராம வாசிகளின் வேண்டுகோளுக் கிணங்கி காந்தி மகானும் அந்த இடத்துக்கு விஜயம் செய்தார். பத்திரிகைப் பிரதிநிதிகளும் மற்றும் பலரும் மகாத்மா காந்தியுடன் சென்றிருந்தோம்.

அங்கே போனபோது ஸ்மசானத்துக்குள் நுழைவதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. சுற்று முற்றும் எரிந்து விழுந்த கொள்ளிக் கட்டைகளும், சாம்பல் குவியல்களும், பச்சை மரங்கள் தீப்பட்டுப் பொசுங்கிப் போயிருந்த காட்சியும் அருவருப்பையும் அச்சத்தையும் உண்டாக்கின.

மேற்படி ஸ்மசானக் காட்சிகளுக்கிடையே ஓர் இடத்தில் மண்டையோடுகளும் எலும்புக் கூடுகளும் கும்பலாகக் குவிக்கப்பட்டிருந்தன.

அந்தக் கோரக்காட்சியைக் கண்ட காந்தி மகானுடைய உள்ளத் துடிப்பை அவருடைய முகம் பிரதிபலித்துக் காட்டியது.

சாந்தஸ்வரூபியான காந்தி மகாத்மா சற்று நேரம் மௌன நிலையில் ஆழ்ந்து போனார். பிறகு கண்களைக் கெட்டியாக மூடிக் கொண்டார். கைக்கோலை எடுத்து அந்த மண்டை ஓடுகளின் மேல் ஊன்றிக் கொண்டார். நீண்ட பெருமூச்சுடனே ஆகாயத்தை நோக்கிப் பிரார்த்தனையிலே ஈடுபட்டார். அகால மரணமடைந்த அந்த மண்டையோட்டுக் குடையவர்களின் ஆத்ம சாந்திக்காகவே காந்தி மகான் பிரார்த்தனை செய்திருக்க வேண்டும். இந்த அபூர்வக் காட்சியைக் கண்டபோது எங்களுக்கெல்லாம் விவரிக்க முடியாத ஓர் உணர்ச்சி ஏற்பட்டது.

* * *

காந்தி மகான் தம்முடைய அஹிம்சா யாத்திரையில் இதுவரை சுமார் 47 கிராமங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள ஹிந்து முஸ்லிம்களின் சமரசத்துக்கான பல முயற்சிகளில் ஈடுபட்டு ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறார்.

"காந்திமகான் நவகாளியில் என்னத்தைச் சாதித்து விட்டார்?" என்று சில அதிசயப் பிரகிருதிகள் சந்தேகப்பட்டுக் கேள்வி கேட்கிறார்கள்.


உன்னத லட்சியத்தை மனதிலே கொண்டு காந்தி மகான் உலகம் உய்ய உழைத்து வருகிறார். துவேஷமும் பீதியும் சூழ்ந்திருந்த இருண்ட வனாந்தரப் பிரதேசமான நவகாளி ஜில்லாவில் சாந்தமும் சமரஸமும் ஏற்பட்டு வருகின்றன.

நவகாளியில் அகதிகளுக்கு இடிந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதிலும், பாழடைந்த வீடுகளைப் புதுப்பித்துக் கொடுப்பதிலும் மகாத்மா தம்முடைய கவனத்தைச் செலுத்தவில்லை. மகாத்மா கட்டுவது மண் வீடல்ல; அங்கே அவர் அன்பின் ஆலயத்தையே நிர்மாணிக்கிறார். அந்த மகத்தான ஆலயத்துக்கு அஹிம்சை, சத்தியம் சாந்தம், சகோதரத்வம், சமத்துவம் முதலியவைகளே அஸ்திவாரங்களாயமைந்திருக்கின்றன. வகுப்புக் குமுறல்களையும் கடும் புயல்களையும் என்றென்றும் எதிர்த்து நிற்கக்கூடிய மாபெரும் சக்தி இந்த ஆலயத்துக்குத்தான் உண்டு.

“போய் வருகிறேன்!”

நவகாளி ஜில்லாவில் மகாத்மாவின் மகத்தான யாத்திரையில் கலந்து கொள்ளும் பாக்கியம் பெற்ற நான் ஊருக்குத் திரும்பும்போது காந்தி மகானிடம் விடைபெற்றுக் கொள்ளும் பொருட்டு அவரைத் தரிசிக்கச் சென்றேன்.

புன்னகை பூத்த முகத்துடனே என்னை ஆசிர்வதித்த காந்தி மகான் கைகளை நீட்டி



ஹரிஜன் நிதிக்குப் பணம் கேட்டார். அவருடைய பாத கமலங்களில் பத்து ரூபாயைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து விட்டுக் கையெழுத்து ஒன்று போட்டுக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டேன். அவர் போட்டுக் கொடுத்த தமிழ்க் கையெழுத்துக்குப் பத்து ரூபாய்தானா மதிப்பு? அக்ஷர லக்ஷம் பெறும் கையெழுத்தல்லவா அது?

முற்றும்



13. உல்லாச வாழ்க்கை!

அன்று மத்தியானம் மறுபடியும் பொன்னம்மாள் சாப்பாடு கொண்டு வந்தாள். இலையைப் போட்டுப் பரிமாறினாள். குமாரலிங்கம் மௌனமாகச் சாப்பிட்டான்.

"காலையில் கலகலப்பாக இருந்தாயே? இப்போது ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?" என்று பொன்னம்மாள் கேட்டாள்.

"ஒன்றுமில்லை, பொன்னம்மா! காலையில் நீ சொன்ன விஷயங்களைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்" என்றான் குமாரலிங்கம்.

"என்ன யோசித்துக் கொண்டிருந்தாய்?" என்று பொன்னம்மாள் திரும்பவும் கேட்டாள்.

"உன் தகப்பனார் என்னிடம் இவ்வளவு கோபமாயிருக்கும்போது நான் இங்கே இருக்கலாமா என்றுதான் யோசனையாயிருக்கிறது. காலையிலே உன்னை ஒன்று கேட்க வேண்டுமென்றிருந்தேன். மறந்து விட்டேன்......"

"உனக்கு மறதி ரொம்ப அதிகம் போலிருக்கிறது!" என்றாள் பொன்னம்மாள்.

"அப்படி ஒன்றும் நான் மறதிக்காரன் அல்ல. உன் முகத்தைப் பார்த்தால்தான் பல விஷயங்கள் மறந்து போகின்றன!......"

"வயிற்றுப் பசியைத் தவிர!" என்று குறுக்கிட்டுச் சொன்னாள் பொன்னம்மாள்.

"ஆமாம்; வயிற்றுப் பசியைத் தவிரத்தான். 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்று பெரியோர் வாக்கு இருக்கிறதே!"

"போகட்டும்! காலையில் என்னை என்ன கேட்க வேண்டும் என்று எண்ணியிருந்தாய்?"

"சூரியன் உதித்து ஒரு நாழிகைப் பொழுதுக்கு இந்தப் பக்கமாக ஒரு பெரிய மனுஷர் போனார். அவர் முகத்தைப் பார்த்தால் ரொம்ப கோபக்காரர் என்று தோன்றியது. ஒரு வேளை அவர்தான் மணியக்காரரோ என்று கேட்க எண்ணினேன்."

"இருந்தாலும் இருக்கும். அவர் பின்னோடு ஒரு நாய் வந்ததா?"

"ஆமாம்; பெரிய வேட்டை நாய் ஒன்று வந்தது. இங்கே வந்ததும் அது குலைத்தது. அந்தப் பெரிய மனுஷர் கையிலிருந்த தடியினால் அதன் மண்டையில் ஒரு அடி போட்டார்."

"அப்படியானால் நிச்சயமாக அப்பாதான்! உன்னை அவர் பார்த்து விட்டாரோ?" என்று பொன்னம்மாள் திகிலுடன் கேட்டாள்.

"இல்லை, பார்க்கவில்லை! அந்த மொட்டைச் சுவருக்குப் பின்னால் நான்

மறைந்து கொண்டிருந்தேன். நாய்க்கு மோப்பம் தெரிந்து குலைத்திருக்கிறது. அதற்குப் பலன் தலையில் ஓங்கி அடி விழுந்தது!''

"நல்ல வேளை! கரும்புத் தோட்டத்துக்கு இந்த வழியாகத்தான் அப்பா நிதம் போவார். தப்பித் தவறி அவர் கண்ணிலே மட்டும் நீ பட்டு விடாதே!''

"அவர் கண்ணிலே படாமல் இருப்பதென்ன? இந்த இடத்திலிருந்தே கிளம்பிப் போய்விட உத்தேசிக்கிறேன், பொன்னம்மா!''

"அதுதான் சரி! உடனே போய் விடு! முன்பின் தெரியாத ஒரு ஆண் பிள்ளையை நான் நம்பினேனே! என்னுடைய புத்தியை விறகுக் கட்டையால் அடித்துக் கொள்ள வேண்டும்!''

இவ்விதம் பொன்னம்மாள் சொன்னபோது அவளுடைய கண்கள் கலங்கிக் கண்ணீர் துளிக்கும் நிலையில் இருப்பதைக் குமாரலிங்கம் கவனித்தான். சற்று முன்னால் அவன் யோசித்து முடிவு செய்திருந்த தீர்மானங்களெல்லாம் காற்றிலே பறந்து போயின. இந்தக் கள்ளங் கபடமற்ற பெண்ணை முதன் முதலில் தான் சந்தித்து இன்னும் இருபத்து நாலு மணி நேரங்கூட ஆகவில்லை யென்பதை அவனால் நம்ப முடியவில்லை.

"உன்னைப் பிரிந்து போவதற்கு எனக்கும் கஷ்டமாய்த்தா னிருக்கிறது. ஆனாலும் வேறு என்ன செய்யட்டும், நீதான் சொல்லேன்!'' என்று குமாரலிங்கம் உருக்கமான குரலில் கூறினான்.

"நீ இப்போது சொன்னது நெசமாயிருந்தால் என்னையும் உன்னோடு இட்டுக் கொண்டு போ!'' என்று மணியக்காரர் மகள் கூறிய பதில், குமாரலிங்கத்தை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. சற்று நிதானித்து விட்டு அவன் சொன்னான்:—

"பொன்னம்மா! உன்னையும் என்னோடு அழைத்துப் போக வல்லவா சொல்லுகிறாய்? அதற்கு எனக்குப் பூரண சம்மதம். உன்னைப் பார்த்த பிறகு, 'கலியாணம் செய்து கொள்வதில்லை' என்ற தீர்மானத்தைக் கூடக் கைவிட்டு விட்டேன். ஆனால் சமய சந்தர்ப்பம் தற்போது சரியாயில்லையே? நானோ போலீஸ் புலிகளிடம் அகப்படக் கூடா தென்று தப்பி ஓடி வந்தவன். என்னை நான் காப்பாற்றிக் கொள்ளுவதே பெருங் கஷ்டம். உன்னையும் கூட அழைத்துக் கொண்டு எங்கே போக? என்னத்தைச் செய்ய?''

"என்னை உன்னோடு அழைத்துக் கொண்டு போவது, கல்லைக் கட்டிக் கொண்டு கேணியிலே விழுகிற மாதிரிதான். அது எனக்குத் தெரியாமலில்லை. அதனாலேதான் உன்னை இங்கேயே இருக்கச் சொல்கிறேன்!'' என்றாள் பொன்னம்மாள்.

"அது எப்படி முடியும்? நீதானே சொன்னாய், உன் அப்பா என்னைப் பார்த்து விட்டால் கடித்து விழுங்கி விடுவார் என்று?''

"அது மெய்தான். ஆனால் இந்தப் பாழுங் கோட்டையிலும் இதைச் சேர்ந்த காடுகளிலும் நீ யார் கண்ணிலும் படாமல் எத்தனை நாள் வேணுமானாலும் இருக்கலாமே! சாப்பாடு கொண்டு வந்து கொடுப்பதற்கு நான் இருக்கிறேன். உனக்கு என்ன பயம்?''

"எனக்கு ஒரு பயமும் இல்லை, பொன்னம்மா! ஆனால் எத்தனை நாள் உனக்கு நான் இம்மாதிரி சிரமம் கொடுத்துக்கொண் டிருப்பது? என்ன காரணத்தைச் சொல்லிக் கொண்டு தினந்தினம் நீ சாப்பாடு கொண்டு வருவாய்? வேண்டாம், பொன்னம்மா! நான் எங்கேயாவது போய்த் தொலைகிறேன். உனக்குக் கஷ்டம் கொடுக்க நான் விரும்பவில்லை.''

பொன்னம்மாள் பரிகாசத்துக்கு அறிகுறியாகக் கழுத்தை வளைத்துத் தலையைத் தோளில் இடித்துக் கொண்டு கூறினாள்:

"பேச்சைப் பார், பேச்சை! எனக்குக் கஷ்டம் கொடுக்க விரும்பவில்லையாம்! நான்தான் சொன்னேனே, நீ இவ்விடத்தை விட்டுப் போனால்தான் எனக்கு மனக் கஷ்டம் உண்டாகும் என்று. நானோ பெண் ஜன்மம் எடுத்தவள். உயிர் இருக்கும் வரையில் யாருக்காவது சோறு படைத்துத் தானே ஆகவேண்டும்? உனக்குச் சில நாள் சோறு கொண்டு வந்து கொடுப்பதில் எனக்கு என்ன கஷ்டம்? ஒன்றுமில்லை. தோட்டத்தில் கரும்பு வெட்டி வெல்லம் காய்ச்சி முடிவதற்குப் பதினைந்து நாள் ஆகும். அது

வரையில் நான் இந்த வழியாக நித நிதம் போக வேண்டி யிருக்கும். அப்பாவுக்குச் சாப்பாடு கொண்டு போவேன். அப்போது உனக்கும் கொண்டு வருகிறேன்......"

குமாரலிங்கம் குறுக்கிட்டு, "பொன்னம்மா! உன் தகப்பனாரை நினைத்தால் எனக்குக் கொஞ்சம் பயமாகத் தானிருக்கிறது. அவரைப் பார்க்கும் போதே முன் கோபக்காரர் என்று தோன்றுகிறது. என் பேரில் வேறே அவருக்கு விசேஷமான கோபம். அதற்குக் காரணம் இல்லாமலும் போகவில்லை. தப்பித் தவறி என்றைக்காவது ஒரு நாள் நாம் இருவரும் பேசிக்கொண் டிருப்பதை அவர் பார்த்து விட்டால் என்ன கதி? என்னைப் பற்றியே நான் சொல்லவில்லை; உனக்காகத்தான் பயப்படுகிறேன்" என்றான்.


"ஐயா! எங்க அப்பர் பொல்லாத மனிதர்தான். ஆனால் ஊருக்குத்தான் அவர் பொல்லாதவர். எனக்கு நல்லவர். சின்னாயி ஒரு நாள் என்னைப் பாடாய்ப் படுத்தியதைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டார். அதற்காக அவளை மொத்து மொத்து என்று மொத்தி விட்டார்!......"

"அதாவது உங்க அப்பாவினால் உனக்கு ஒன்றும் அபாயம் இல்லை, வந்தால் எனக்குத்தான் வரும் என்று சொல்லுகிறாயா?"

அந்தக் கேலியை விரும்பாத பொன்னம்மாள் முகத்தைச் சிணுக்கிக் கொண்டு சொன்னாள்:

"அப்படி ஒன்றும் சொல்லவில்லை. எங்க அப்பாவுக்கு நான் செல்லப் பெண். சமயம் பார்த்துப் பேசி உன் விஷயத்தில் அவருடைய மனதை மாற்றி விடலாம் என்றிருக்கிறேன்."

முதல் நாளிரவு சோலைமலை மகாராஜாவும் இளவரசியும் பேசிக் கொண்டிருந்த காட்சியையும், தான் பலகணியின் அருகில் மறைந்திருந்து ஒட்டுக் கேட்ட வார்த்தைகளையும் குமாரலிங்கம் நினைவு கூர்ந்தான்.



"பொன்னம்மா! நீ என்னதான் பிரயத்தனம் செய்தாலும் உன் தகப்பனாரின் மனதை மாற்ற முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை!" என்றான்.

"ஏன் இவ்வளவு அவநம்பிக்கைப் படுகிறாய்? கொஞ்சம் பொறுத்திருந்து என் சாமார்த்தியத்தைப் பாரேன்!" என்றாள் பொன்னம்மாள்.

"நீ சாமர்த்தியக்காரிதான்; அதைப் பற்றிச் சந்தேகமில்லை. ஆனால் என் விஷயத்தில் எதற்காக நீ இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்கிறாய்? இன்றைக்கோ, நாளைக்கோ என்னைப் போலீஸார் வேட்டையாடிப் பிடித்து விடலாம். அப்புறம் இந்த ஜன்மத்தில் நாம் ஒருவரை யொருவர் பார்க்கவே முடியாது. என் உடம்பில் இருக்கும் உயிர் ஒரு மெல்லிய கயிற்றின் முனையிலே தொங்கிக் கொண்டிருக்கிறது! எந்த நிமிஷத்தில் இந்தக் கழுத்திலே சுருக்கு விழுமோ, தெரியாது. இப்படிப்பட்ட நிலையில் உள்ள என்னை நீ நம்ப வேண்டாம்; நம்பி ஏமாற்றமடைய வேண்டாம்!" என்று குமாரலிங்கம் இரங்கிய குரலில் சொன்னான்.

பொன்னம்மாள் உணர்ச்சி மிகுதியினால் சற்று நேரம் சும்மா இருந்தாள். பின்னர் கூறினாள்:

"ஐயா! விதி அப்படியிருக்குமானால் அதை யாராலும் மாற்ற முடியாது. ஆனால் சோலைமலை முருகன் அருளால் அப்படி ஒரு நாளும் நடக்காது. என் தகப்பனாருடைய மனதை மாற்றுவதற்கு என்னுடைய சாமர்த்தியத்தை மட்டும் நான் நம்பி யிருக்கவில்லை. முருகனுடைய அருளையுந்தான் நம்பி யிருக்கிறேன்.

"நேற்றிரவு அப்பா இன்னொரு விஷயமும் சொன்னார்: 'இந்த இங்கிலீஷ்காரப் பய மவனுங்களையும் பூராவும் நம்பிவிடக் கூடாது. குனிந்தால் முதுகில் உட்காருவார்கள்; நிமிர்ந்தால் காலில் விழுவார்கள். அவர்களை இந்தப் பாடு படுத்தி வைக்கிற காங்கிரஸ்காரர்களின் கையிலேயே மறுபடியும் கவர்ன்மெண்டைக் கொடுத்தாலும் கொடுப்பார்கள்! இன்றைக்குத் தலைமறைவாய் ஒளிந்து திரிகிற குமாரலிங்கம் நாளைக்கு ஒரு வேளை ஜில்லா கலெக்டராகவோ, மாகாண மந்திரியாகவோ வந்தாலும் வருவான். அப்படி வந்தால் சோலைமலை முருகன்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும். காங்கிரஸ்காரனுங்க மறுபடியும் அதிகாரத்துக்கு வந்தால், என்னென்ன அக்கிரமம் செய்வான்களோ, தெரியாது!' என்று அப்பா ரொம்ப ஆத்திரமாய்ப் பேசினார். அதோடு 'காங்கிரசுக்கும் சர்க்காருக்கும் ஏதோ ராஜிப் பேச்சு நடக்கிறதாகக் கேள்வி' என்றும் சொன்னார்.—ஐயா! நீ ஒரு வேளை மந்திரியாகவோ ஜில்லா கலெக்டராகவோ வந்தால், அக்கிரமம் ஒன்றும் செய்யமாட்டாயல்லவா? அப்பாவைக் கஷ்டத்துக்கு உள்ளாக்க மாட்டாயல்லவா?" என்று பொன்னம்மாள் கண்ணில் நீர் ததும்பக் கேட்டாள்.

"மாட்டேன், பொன்னம்மா! மாட்டேன்! பிராணன் போய்க் கொண்டிருந்த சமயத்தில் சோறு கொண்டு வந்து போட்டு உயிர்ப் பிச்சை கொடுத்த பொன்னம்மாளின் தகப்பனாரை ஒரு நாளும் கஷ்டப்படுத்த மாட்டேன். அவர் மேல் ஒரு சின்ன எறும்பு உட்கார்ந்து கடிப்பதற்குக் கூட இடங் கொடுக்க மாட்டேன்" என்றான் குமாரலிங்கம்.

* * *

மேலே கண்ட சம்பாஷணை நடந்த பிறகு ஏழெட்டுத் தினங்கள், அந்தப் பாழடைந்த சோலைமலைக் கோட்டையிலேயே குமாரலிங்கத்தின் வாழ்க்கை சென்று கொண்டிருந்தது. ஆனந்தமாகவும், குதூகலமாகவும் சென்று கொண்டிருந்தது என்றே சொல்ல வேண்டும்.

மணியக்காரர் மகளிடம் அவனுடைய நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. ஒவ்வொரு நாளும் பொன்னம்மாள் சாப்பாடு கொண்டு வந்தபோது குதூகலத்தையும் கொண்டாட்டத்தையும் கூடக் கொண்டு வந்தாள். பிரதி தினமும் அவளுடைய கால் மெட்டியின் சத்தத்தோடு கலகலவென்ற சிரிப்பின் ஒலியும் சேர்ந்து வந்தது. எனவே அந்தப் பாழுங் கோட்டையில் ஒளிந்திருந்து கழித்த ஒவ்வொரு நாளும் ஒரு உற்சவ தினமாகவே குமாரலிங்கத்துக்குச் சென்று வந்தது.

சோலைமலைக் கோட்டைக்கு அவன் வந்து சேர்ந்த அன்று பகலிலும் இரவிலும் கண்ட அதிசயக் காட்சிகளைப் பிற்பாடு அவன் காணவில்லை. அவையெல்லாம் பல இரவு சேர்ந்தாற் போல் தூக்கமில்லாதிருந்த காரணத்தினால் ஏற்பட்ட

உள்ளக் கோளாறுகள் என்று குமாரலிங்கம் தேறித் தெளிந்தான்.

ஆனால் இந்த விஷயத்தில் அவனுக்கு எவ்வளவுக்கெவ்வளவு தெளிவு ஏற்பட்டதோ, அவ்வளவுக்குப் பொன்னம்மாளுக்குப் பிரமை அதிகமாகி வருவதை அவன் கண்டான்.

சோலைமலை இளவரசியைப் பற்றியும் மாறனேந்தல் மகாராஜாவைப் பற்றியும் குமாரலிங்கம் கனவிலே கண்ட காட்சிகளைத் திரும்பத் திரும்ப அவனைச் சொல்ல வைத்துப் பொன்னம்மாள் அடங்காத ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தாள். அதோடு, அவன் கண்டதெல்லாம் வெறும் கனவல்லவென்றும், சுமார் நூறு வருஷத்துக்கு முன்னால் உண்மையாக நடந்தவையென்றும் பொன்னம்மாள் சாதித்து வந்தாள். அவள் கொண்டிருந்த இந்தக் குருட்டு நம்பிக்கை கூடக் குமாரலிங்கத்தின் உல்லாசம் அதிகமாவதற்கே காரணமாயிருந்தது. சில சமயம் அவன், "மாறனேந்தல் மகாராஜாதான் குமாரலிங்கமாகப் பிறந்திருக்கிறேன்! சோலைமலை இளவரசிதான் பொன்னம்மாளாகப் பிறந்திருக்கிறாய்!" என்று தமாஷாகச் சொல்வான். வேறு சில சமயம் பொன்னம்மாளைப் பார்த்ததும், "இளவரசி! வருக!" என்பான்.

"மாணிக்கவல்லி! அரண்மனையில் எல்லாரும் சௌக்கியமா?" என்று கேட்பான்.

குமாரலிங்கம் இப்படியெல்லாம் பரிகாசமாகப் பேசிய போதிலும், பொன்னம்மாளின் கபடமற்ற உள்ளத்தில் அவ்வளவும் ஆழ்ந்து பதிந்து கொண்டு வந்தது.

14. ஆனந்த சுதந்திரம்

குமாரலிங்கம் அந்த இடிந்த கட்டிடங்களுக்கு மத்தியில் அவ்வளவு உற்சாகமாகவும் உல்லாசமாகவும் நாட்களைக் கழித்து வந்ததற்கு, பொன்னம்மாளின் நேசம் மட்டுமல்லாமல், வேறொரு காரணமும் இருந்தது. அரசியல் நிலைமையைப் பற்றி மணியக்காரர் சொன்னதாகப் பொன்னம்மாள் அன்று சொன்ன செய்திதான் அது. பிரிட்டிஷ் சர்க்காருக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் ராஜிப் பேச்சு நடந்து வருகிறது என்பதைப் பரிபூரணமாய் அவன் நம்பினான். அதைப் பற்றிச் சந்தேகிக்கவே அவனுக்குத் தோன்றவில்லை. "அன்று தளவாய்ப் பட்டணத்தில் நடந்தது போலத்தானே இமய மலையிலிருந்து குமரி முனை வரையில் எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் சூறாவளிப் புரட்சி நடந்திருக்கும்? அந்தப் புரட்சியைப் பிரிட்டிஷ் சர்க்காரால் எப்படி எதிர்த்து நிற்க முடியும்? ஜப்பான்காரனோ பர்மா எல்லைப் புறத்தில் வந்து கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறான்! பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரஸுக்குச் சரணாகதி அடையாமல் வேறு என்ன செய்ய முடியும்?" என்னும் கேள்வி அடிக்கடி அவன் மனதில் எழுந்து கொண்டிருந்தது. தளவாய்ப்பட்டணம் சரித்திரப் பிரசித்தி அடைந்த அந்த விசேஷ தினத்தில் அவன் காதில் விழுந்த ஒரு சம்பாஷணையும் அவனுக்கு அடிக்கடி ஞாபகம் வந்து கொண்டிருந்தது.

சப் ஜெயிலின் கதவுகளை உடைத்துக் கைதிகளை விடுதலை செய்துவிட்டு வீர முழக்கத்துடனும் சுதந்திர கோஷங்களுடனும் திரும்பிய ஜனங்களில், கிராமவாசிகள் இருவர் பின்வருமாறு பேசிக் கொண்டார்கள்:

"ஆமாம்; இந்தியா சுதந்திரம் அடைஞ்சு விட்டால்......" என்று ஒருவர் ஏதோ கேட்க ஆரம்பித்தார்.

"அடைஞ்சு விட்டால் என்ன? அதுதான் அடைஞ்சாகி விட்டதே!" என்றார் இன்னொருவர்.

"சரி; இந்தியா சுதந்திரம் அடைஞ்சுட்டுது! இனிமேல் யாரு நமக்கு ராசா என்று கேட்கிறேன். பண்டித சவஹர்லால் நேருவா? நேதாசி சுபாஸ் போசா?" என்றார் முதலில் பேசியவர்.

"இரண்டு பேரிலே யார் ராசாவானால் என்ன? நேருசி ராசா ஆனால், நேதாசி மந்திரி ஆகிறாரு! நேதாசி

ராசா ஆனால் நேருசி மந்திரி ஆகிறாரு!'' என்றார் இரண்டாவது பேசியவர்.

படிப்பில்லாத பட்டிக்காட்டு ஆசாமிகளின் மேற்படி பேச்சை அன்றைக்குக் குமாரலிங்கம் கேட்ட போது அவன் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டான். ஆனால் இப்போது அதைப் பற்றி எண்ணிய போது அவர்கள் பேச்சு ஏன் உண்மையாகக் கூடாது என்று அவனுக்குத் தோன்றியது. ஜவாஹர்லால் நேருவும் சுபாஷ் சந்திர போஸும் இந்தியாவின் ராஜாவாகவும் மந்திரியாகவும் வராவிட்டாலும், குடியரசின் அக்கிராசனராகவும் முதன் மந்திரியாகவும் வரக்கூடுந்தானே? அப்படி வரும் போது மணியக்காரர் சொன்னது போல் இந்தியக் குடியரசு சர்க்காரில் தனக்கும் ஒரு பதவி ஏன் கிடைக்கக் கூடாது? கிடைக்காமலிருந்தால் தான் ஆச்சரியமே தவிர, கிடைத்தால் அதில் ஆச்சரியம் ஒன்றும் இராது!

இப்படிப் பட்ட எண்ணங்கள் குமாரலிங்கத்துக்குக் குதூகலத்தை அளித்ததோடு, ஓரளவு பரபரப்பையும் உண்டாக்கி வந்தன. பொன்னம்மாளைத் தினம் பார்த்த உடனே "இன்றைக்கு ஏதாவது விசேஷம் உண்டா? காங்கிரஸ் விஷயமாக அப்பா ஏதாவது சொன்னாரா?'' என்று அவன் கேட்டுக் கொண்டு வந்தான். ஆனால் முதல் நாள் சொன்ன செய்திக்குப் பிறகு பொன்னம்மாள் புதிய செய்தி எதுவும் கொண்டு வரவில்லை.

"உங்கள் ஊருக்குப் பத்திரிகை வருவதில்லையா?'' என்று ஒரு நாள் குமாரலிங்கம் கேட்டதற்கு, பொன்னம்மாள், "வராமல் என்ன? எங்கள் வீட்டுக்கே பத்திரிகை வந்து கொண்டு தானிருந்தது. ஆனால் மகாத்மா காந்தி சொல்லி விட்டார் என்று எல்லாப் பத்திரிகைகளையும் நிறுத்திப்பிட்டார்களாமே? அதற்கப்புறந்தான் வருகிறதில்லை!'' என்றாள்.

"புரட்சித் திட்டத்தில் மற்றதெல்லாம் சரிதான்; ஆனால் பத்திரிகையை நிறுத்துகிற காரியம் மட்டும் சுத்தப் பிசகு!'' என்று குமாரலிங்கம் தன் மனத்துக்குள்ளே சொல்லிக் கொண்டான். (தொடரும்)

சரணம் சாமி, ஐயப்பா!

சின்ன அண்ணாமலை

1. பிரயாணம்

கட்டுரையாகட்டும், கதையாகட்டும், விறுவிறுப்பாகவும் ஓட்டமாகவும் இருக்க வேண்டுமென்று இலக்கிய சிகாமணிகள் கூறியிருக்கிறார்கள். ஆகையால் என்னுடைய கட்டுரையைத் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஆரம்பிக்கிறேன்.

குற்றாலம் போவதென்றால் தமிழ் ரஸிகர்களுக்குக் கும்மாளியும் கொண்டாட்டமும் தான். ஏனெனில் அங்கே உடலைக் குளிர்விப்பதற்குத் தூய்மையான அருவியிருக்கிறது. உள்ளத்திற்கோ தெவிட்டாத இன்பம் அளிக்கும் கவிதைகளைச் சொல்ல டி. கே. சி. அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, கல்கி ஆசிரியருடனும் 'ட்ரோஜன்' அண்ணாமலைச் செட்டியாருடனும் எழும்பூரில் ரயில் ஏறியபோதே கும்மாளி ஆரம்பமாகி விட்டது!

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸூம் எங்களுடைய ஆர்வத்தை அறிந்து அதி வேகமாகச் சென்றது. ஆனாலும் அதன் வேகம் எங்களுக்குப் போதவில்லை.

இரவு சுமார் மூன்று மணிக்குக் கல்கி ஆசிரியர் "பொழுது விடிந்து விட்டதா?" என்று கேட்டார். "இல்லை; இன்னும் ரொம்ப நேரமிருக்கிறது; தூங்குங்கள்!" என்றேன். பத்து நிமிஷம் கழித்து மறுபடியும்; "விடிந்து விட்டதா?" என்று கேட்டார். "என்ன ஸார், இது! இப்பொழுது தானே விடிவதற்கு வெகு நேரமிருக்கிறது என்று சொன்னேன்?" என்று சலித்துக் கொண்டேன்.

"இந்தச் சூரியன் சுத்த மோசம்!" என்றார் கல்கி.

"ஒருவேளை சூரியனைப் பாம்பு விழுங்கியிருக்கலாம். அல்லது சூரியனுடைய தேரின் அச்சுமரம் இற்று நொறுங்கிப் போயிருக்கலாம்! வீணாகச் சூரியனைக் குறை சொல்கிறீர்களே!" என்றேன்.

"இந்தமாதிரி டி. கே. சி. ஒரு பாட்டுச் சொல்வார்களே!" என்றார் ட்ரோஜன்.

உடனே அசல் டி. கே. சி. பாணியில் நான் பாடல் சொல்ல ஆரம்பித்தேன்.

ஒரு காதலி தன் நாயகன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்து, வாராதபடியால் வருத்தப்பட்டு, பாங்கியை எழுப்பிச் சூரியனைப் பற்றிக் குறை கூறுகிறாள். காதலியின் ஆர்வத்தைப் பற்றியும் தோழியின் அலட்சியத்தைப் பற்றியும் விஸ்தாரமாய்ச் சொன்ன பிறகு, "இப்பொழுது வருகிறது பாட்டு. அற்புதமான பாட்டு. நாயகி தோழியைப் பார்த்துச் சொல்வதாக பாவம். இப்போது பாட்டைப் பார்க்கலாம்" என்ற பீடிகையுடன் பாடலை ஆரம்பித்தேன் :—

"அரவம் கரந்ததோ ?

ஒருவேளை சூரியனை ராகு என்கிற பாம்பு விழுங்கி விட்டதோ !

அச்சுமரம் இற்றுப் புரவி
கயிறுருவிப் போச்சோ ?

சூரியன் ஏறிவந்த தேரின் அச்சு மரம் இற்றுப் போய் அதில் பூட்டியிருந்த குதிரைகள் கயிற்றை உருவிக்கொண்டு ஓடிப்போய் விட்டனவோ? அதனால் சூரியன் வர முடியாமல் தவிக்கிறானோ!

இனிப் பாடலை முழுதும் பார்க்கலாம்:

அரவம் கரந்ததோ
அச்சுமரம் இற்றுப்
புரவி கயிறுருவிப்
போச்சோ — இரவிதான்
செத்தானோ வேறுவழி
சென்றானோ. பாங்கிஎனக்(கு)
எந்நாள் விடியும்
இரா ?"

இப்படி நான் உற்சாகமாகப் பாடி முடித்ததும், "சூரியன் எப்படியாவது செத்து ஒழியட்டும். உங்களுடைய பாட்டைக் கேட்டதில் எனக்குக் கவிதைத் தாகம் அதிகமாகி விட்டது. ஒரு சோடா கிடைக்குமா, பாருங்கள்!" என்றார் கல்கி.

அந்த நேரத்தில் சோடா எங்கே கிடைக்கப் போகிறது? அதுவும் திருச்சி

பாராட்டத் தொடங்கினார்கள். சிலர் அவசரமாக ஓடிப் பூமாலை வாங்கிக் கொண்டு வந்து போட்டார்கள். "இன்று ரயிலைச் சரியான நேரத்துக்குக் கொண்டு வந்தீர்களே? அதை ரொம்பவும் பாராட்டுகிறோம்!" என்றார்கள். என்ஜின் டிரைவர் திருதிருவென்று விழித்து விட்டுக் கடைசியில், "இல்லை, இல்லை! இது நேற்று வரவேண்டிய ரயில்; இன்றைக்கு வந்திருக்கிறது!" என்றாராம்.

இந்தக் கதையைக் கேட்டுக் கொண்டு டி. கே. சி. அவர்கள் நின்ற இடத்திலேயே நின்றார்கள். ரயிலும் நகர ஆரம்பித்து விட்டது. அப்போது ஒருவர் கையில் ரோஜாப் பூ மாலைகளுடன் விரைவாக வந்து கொண்டிருந்தார். ரயில் சீக்கிரம் வந்து விட்டது பற்றி டி. கே. சி. புகார் சொன்னதின் காரணம் எங்களுக்கு விளங்கிற்று. டிரைவர் தப்பி விட்டார். நாங்கள் அகப்பட்டுக் கொண்டோம்.

பிறகு நண்பர் சுப்பராஜாவின் காரில் ஏறிக்கொள்ள, கார் குற்றாலத்தை நோக்கிக் 'கார் எனக் கடிது' சென்றது!



நெடுந்தூரம் யாத்திரை செய்து ஐயப்பன் ஆலயத்தை அடைந்த பக்த கோடிகள் நமது போட்டோக்காரர் ஸ்ரீ கணேசனுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஆலயவாசலில் ஒரு கணம் தாமதிக்கிறார்கள்!

* * *

அருவியில் ஸ்நானம் செய்து ரசிகமணியின் வீட்டில் உணவருந்தினோமோ இல்லையோ, "கல்லிடைக்குறிச்சியிலிருந்து நவாப்பின் மோட்டார் வந்திருக்கிறது" என்று ஒருவர் வந்து சொன்னார். நாங்கள் மூவரும் இந்தப் பிரயாணம் எதற்காகக் கிளம்பினோம் என்பதை நானும் இப்போது சொல்லியாக வேண்டும்.

நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் என்றால் தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரே குதூகலம். ஏனெனில் அவர் பல வருஷ காலமாக நாடகத் துறையில் பல நூதன முறைகளைக் கையாண்டு தமிழ் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறார். அப்பேர்ப்பட்ட நவாப் ராஜமாணிக்கம் சில வருஷ காலமாகத் தமிழ் நாட்டுப் பக்கமே தென்படவில்லை. திருவிதாங்கூர் சமஸ்தானத்திலேயே இருந்து நாடகங்களை நடத்தி வந்தார்.

ஸ்ரீ ராஜமாணிக்கம் அசைக்க முடியாத உயர்ந்த லட்சியங்களை உடையவர். நல்ல காரியங்களுக்கு உதவி செய்ய எப்பொழுதும் பின் வாங்காதவர். எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த நிதி ஆரம்பமானவுடன் கல்கி ஆசிரியருக்கு ரூ. 251 அனுப்பினார். அத்துடன் அவர் திருப்தியடையவில்லை. மலையாள தேசத்தை விட்டுவிட்டுத் தமிழ் நாட்டுக்கு வந்தவுடன் கல்லிடைக் குறிச்சியில் நடத்திய முதல் 'ஐயப்பன்' நாடகத்தின் வசூலைப் பாரதி ஞாபகார்த்த கைங்கரியத்துக்குத் தருவதென்று தீர்மானித்தார். அதன்படி மேற்படி நாடகத்தை வெற்றிகரமாக நடத்தி அதில் வசூலான தொகையில் வரி போகப் பாக்கி ரூ. 1951/யும் கல்கி ஆசிரியரிடம் கொடுக்கப் போவதாகத் தெரியப்படுத்தினார். மேற்படி தொகையைப் பெற்றுக் கொள்ள டி. கே. சியும் கல்கியும் செல்லும் சமயத்தில் நானும் கூடப் போவதென்று முடிவு செய்தேன். ஒரு வேளை நவாப் ராஜமாணிக்கம் கொடுக்கும் பணத்தைக் கல்கியும், டி. கே. சியும் தூக்க முடியாமல் கஷ்டப்படக் கூடுமே, நானும் போனால் உதவியாக இருக்குமே என்ற பரோபகார நோக்கந்தான்.

இந்தப் பிரயாணத்தோடு பிரயாணமாக எட்டயபுரம் சென்று, அங்கே ராஜாஜியினால் அஸ்திவாரம் இடப்பட்ட பாரதி மண்டபம் எந்த நிலையில் இருக்கிறது என்று பார்த்து வரவும் எண்ணியிருந்தோம்.

* * *

குற்றாலத்திலிருந்து கல்லிடைக் குறிச்சிக்குப் போகும்போதே நவாப் ராஜமாணிக்கம் நாடகக் கம்பெனியின் மானேஜரான மணி ஐயர் அவர்கள், ஐயப்பன் கதையை

யும், அந்தக் கதையை ஸ்ரீ ராஜமாணிக்கம் நாடகமாக்கி நடிக்கும்படி ஏற்பட்ட வரலாற்றையும், அவருடைய பக்தியின் சிறப்பையும் பற்றி எங்களுக்கு இதிகாசமாகச் சொல்லிக் கொண்டு வந்தார். கல்லிடைக்குறிச்சி போனதும் இதிகாசம் உண்மையாகவே இருந்ததைக் கண்டோம்.



இரண்டாவது மந்திரி மீது தனது முஸ்லிம் நண்பன் கொண்ட கோபத்தைப் பால ஐயப்பன் தணிக்க முயலுகிறான்.

நவாப் ராஜமாணிக்கம் கட்டுக் கட்டாக விபூதி பூசிக்கொண்டு நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு வைத்துப் பக்தி வடிவமாக விளங்கினார். அன்புடன் எங்களை வரவேற்று அவரும் மற்ற நடிகக் குழந்தைகளும் தினமும் பூஜை செய்வதற்காக நிர்மாணித்திருக்கும் கொட்டகைக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு தேவி, சரஸ்வதி, லக்ஷ்மி, ஐயப்பன் முதலிய தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்திருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், மகாத்மா காந்தி முதலிய மகான்களின் படங்களும் வைத்திருந்தது. சந்நிதியில் தீபாலங்காரம் அற்புதமாயிருந்தது.

சந்நிதிக்கு எதிரே, தேவி நாடக சபையைச் சேர்ந்த சுமார் 250 பேர் (பெரும்பாலோர் பாலர்கள்) இரு வரிசையாக உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தக் காலத்தில் இவ்வளவு பெருக்கும் உணவுப் பொருள்கள் சேகரித்துச் சாப்பாடு போடும் அதிசயத்தைப் பற்றி ரஸிக மணி குறிப்பிட்டார்கள். உடனே, அதில் ஏற்படும் கஷ்டங்களைப் பற்றி ஸ்ரீ ராஜமாணிக்கம் விவரித்து, "எல்லாம் தேவியின் அருளால் தான் நடக்கிறது!" என்று முடித்தார். தேவியின் அருளால் எங்களுக்கும் நல்ல விருந்து கிடைத்தது.

இதற்குள் நாடகத்திற்கு நேரம் ஆகி விட்டதால் எல்லோரும் கொட்டகைக்குப் போய்ச் சேர்ந்தோம்.

2. ஐயப்பன் நாடகம்

சாம்பிராணிப் புகை 'குப் குப்' என்று கிளம்பி மணம் பரப்பியது. வாத்தியங்கள் பரபரப்பாக ஒலிக்கத் தொடங்கின. மணி 'டக் டக்' என்று அடித்தது. குபீரென்று விளக்குகளும் அணைந்தன. சரி, நாடகம் ஆரம்பித்து விட்டது என்று அறிந்தோம். அதற்குப் பிறகு வேறு எதிலும் கவனம் செல்லவில்லை.

எல்லா விக்னங்களையும் தீர்த்து வைக்க வேண்டிய விக்னேஸ்வரர் பெரிய திரையின் மத்தியில் ஒரு சிறிய துவாரத்தின் மூலம் தோன்றினார். சின்னஞ்சிறு விநாயகர்; பால் வடியும் முகம். அவர் கல்லுப் பிள்ளையாராக இருந்து விடாமல் தாளத்திற்குத் தகுந்தாற்போல் ஆட ஆரம்பித்த அழகே அழகு! மனதை உருக்கி ஆனந்த பரவசத்தில் ஆழ்த்திவிட்ட அந்த ஆரம்பக் காட்சியை மறக்கவே முடியாது.

* * *

நாடகக் கதை பழைய புராணத்தில் ஆரம்பமாகிறது. இடையில் ராஜா ராணி கதையாக மாறுகிறது. கடைசியாகத் தற்காலத்தில் பக்தர்கள் திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குப் பக்தி பாவசத்துடன் யாத்திரை செய்யும் காட்சியில் பூர்த்தி அடைகிறது.

தேவாசுரர்கள் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தவுடன் அசுரர்கள் தங்களுக்குத்தான் பூரா அமுதமும் வேண்டுமென்று சண்டை பிடிக்கிறார்கள். மகா விஷ்ணு மோஹினியாக அவதாரம் எடுத்து வந்து தேவர்களுக்கு மட்டும் அமுதத்தைக் கொடுத்து விடுகிறார்.

மகாவிஷ்ணுவின் மோகினி அவதாரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டுப் பரமசிவன் அங்கு வருகிறார். மோகினி அவதாரத்தைக் கண்டு மோகித்து விடுகிறார். அதிலிருந்து ஹரியையும் ஹரனையும் 'புத்' தென்ற நரகத்திலிருந்து காப்பாற்ற ஹரிஹர புத்திரன் அவதரிக்கிறான். குழந்தையை ஒரு காட்டில் விட்டுவிடுகிறார்கள்.

புத்திரனே இல்லாத பந்தள தேசத்து அரசன் அக் குழந்தையைக் கண்டு எடுத்து மகிழ்ச்சியுடன் வீட்டுக்குக் கொண்டு வந்து வளர்க்கிறான். 'மணி கண்டன்' என்று

பெயரும் சூட்டுகிறான். மணிகண்டன் வந்த முகூர்த்தமாகப் பந்தள தேசத்து அரசனுக்கு ஒரு சொந்தக் குழந்தையும் பிறக்கிறது. மணிகண்டன் சிறுவனாகப் பள்ளியில் படிக்கும்போது உபாத்தியாயரின் குழந்தைக்கு இருந்த குருடு, செவிடு-ஊமை, நொண்டி முதலிய ஊனங்களைச் சொஸ்தமாக்கி விடுகிறான்.

பந்தள தேசத்து அரசாங்கத்தின் இரண்டாவது மந்திரி பிரமாத அட்டகாசம் செய்து மக்களைக் கொடுமைப் படுத்தி வருகிறான். "கள்ளுக் குடிக்காதே!" என்று பிரசாரம் செய்த தொண்டர்களைச் சவுக்கால் அடித்துத் துன்புறுத்துகிறான். இந்தக் கொடுஞ் செயல்களை மணிகண்டன் கண்டிக்கிறான். அதிலிருந்து மணிகண்டன் மீது மேற்படி மந்திரிக்குத் துவேஷம் உண்டாகிறது. ஒரு மந்திரவாதியைக் கொண்டு மணிகண்டனை மந்திரத்தினால் கொல்லும்படி ஏவுகிறான். அது பலிக்காமற் போகவே மேலும் சூழ்ச்சி செய்கிறான். மகாராணியிடம் சென்று அவளுடைய மனதை மாற்றி விடுகிறான். மகாராணி அவன் சொன்னபடி தலைவலி என்று படுத்துக் கொள்கிறாள். தலைவலி தீரப் புலிப்பால் வேண்டுமென்று சொல்லுகிறாள். மணிகண்டன் புலிப்பால் கொண்டு வருவதாகச் சொல்லிக் காட்டுக்குப் போகிறான். கிற்க. தத்தாத்ரேயரால் "மஹிஷியாகப் போவாய்!" என்று சாபம் பெற்ற ரிஷி பத்தினி எருமையாக மாறி விடுகிறாள். அப்படி உருவெடுத்த எருமை இந்திரனையும் தேவர்களையும் துரத்தி விட்டுத் தேவலோக சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறது! (அப்பொழுது என்ன? இப்போது கூட உலகத்தின் பல பாகங்களில் மஹிஷம் அல்லது மஹிஷியின் அரசாட்சி நடப்பதாகவே தோன்றுகிறதல்லவா?) அந்த மஹிஷியைக் கொன்று அவளுடைய சாபத்தைப் போக்கி விடுகிறான், மணிகண்டன்.

பின்னர் இந்திரனைச் சிங்கமாகவும் மற்ற தேவர்களைப் புலிகளாகவும் ஆக்கிச் சிங்கத்தின்மீது ஏறிக் கொண்டு புலிக் கூட்டங்களுடன் பந்தள தேசத்திற்கு வருகிறான் மணிகண்டன். "வேண்டிய மட்டும் புலிப்பால் இருக்கிறது; எடுத்துக் கொள், தாயே!" என்று மகாராணியிடம் கூறுகிறான். பந்தள தேசத்து அரசன் மணிகண்டனைப் பார்த்து, "நீ யார்? உண்மையைச் சொல்! நீ சாதாரண மனிதன் அல்ல!" என்று கதறுகிறான். மணிகண்டன் தான் ஹரிஹர புத்திரன் என்பதைத் தெரிவித்து, "இப் பூவுலகத்தில் நான் இருக்க வேண்டிய காலம் முடிந்து விட்டது" என்று சொல்லிவிட்டு, மறைந்து விடுகிறான். உடனே பந்தள மன்னன், "ஐயா! அப்பா! ஐயப்பா! நீ எங்கே போனாய்?" என்று அலறிக் கதறுகிறான். அதிலிருந்து "ஐயப்பன்" என்ற பெயர் ஹரிஹர புத்திரனுக்கு ஏற்படுகிறது.

பந்தள தேசத்து அரசன் பெரிய பெரிய இடையூறுகளை எல்லாம் தாண்டிச் சபரி மலையின் உச்சியில் ஐயப்பனுக்குக் கோயில் கட்டி முடிக்கிறான்.

தீவிர வைஷ்ணவர் ஒருவரின் வயிற்று வலி ஐயப்பன் விபூதிப் பிரசாதம் சாப்பிட்ட மாத்திரத்திலே தீர்ந்துவிடுகிறது. இம் மாதிரி பக்தர்களுக்குப் பல நன்மைகளைச் செய்து கொண்டு ஐயப்பன் இன்றைக்கும் சபரிமலையில் கோயில் கொண்டிருக்கிறான்.

* * *

மேலே சொன்ன கதையை வைத்துக் கொண்டு "ஐயப்பன்" நாடகத்தைப் பிரமாத விரு விருப்புடனும் உணர்ச்சி பாவத்துடனும் பக்திப் பெருக்குடனும் மதுரை தேவி பால விநோத சங்கீத சபையார் நடத்துகிறார்கள். சிமிஷத்திற்கு சிமிஷம்



ஐயப்பனுடைய பக்தகோடிகள் காடுமலைகளைக் கடந்து எத்தனையோ இடையூறுகளைத் தாண்டி சபரிமலைச் சிகரத்திலுள்ள ஐயப்பன் ஆலயத்துக்கு யாத்திரை செய்கிறார்கள்.

இந்திர ஜாலத்தைப்போல் காட்சிகள் மாறிய அதிசயத்தைச் சொல்லி முடியாது. மின்சார விளக்கை அணைத்து உடனே மறுபடியும் ஏற்ற வேண்டியதுதான்—காடு, அரண்மனையாக மாறியிருக்கும்; பூலோகம் தேவலோகமாக மாறி யிருக்கும்!

நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் தாமே சபரி மலைக்குச் சென்று ஐயப்பனைத் தரிசித்து உத்தரவு பெற்றுக் கொண்டே இந்த நாடகம் நடத்த ஆரம்பித்தாராம். தமது நாடக சபையைச் சேர்ந்த சுமார் 250 பேரையும் சபரிமலைக்கு அழைத்துச் சென்று ஐயப்பன் தரிசனம் செய்வித்தாராம். இது காரணமாக நடிகர்கள் எல்லாரும் (திரை தூக்கி விடுவோர், விளக்கு அணைத்து ஏற்றுவோர் உள்பட) அபார சிரத்தையுடனும் ஆர்வத்துடனும் தங்கள் கடமையைச் செய்கிறார்கள்.

பந்தள தேசத்து அரசனாக நடித்தவர் சோகரஸமான கட்டங்களில் நன்றாக உணர்ச்சியை வெளிப்படுத்தி நடித்தார். வார்த்தைகளை அழுத்தம் திருத்தமாகவும் கணீர் கணீர் என்றும் உச்சரித்தார். மணிகண்டனாக முதலில் நடித்துத் தாய்ப்பால் அருந்திய பொம்மைக் குழந்தை மிக்க அழகாயிருந்தது. அதைக் காட்டிலும் பால ஐயப்பனாக நடித்த குழந்தையின் முகத்தில் குறுகுறுப்பும் களையும் விளங்கின.

பள்ளிக்கூடத்தை நன்றாகச் சித்திரித்திருந்தார்கள். மாணவர்களில் கோணல் புத்தி மாணவனாக நடித்த பையன் அபார நகைச்சுவையுடன் நடித்தான். உபாத்தியாயர் பிள்ளைகளைப் பார்த்து, "உங்களில் ஒருவருக்காவது மூளையே கிடையாது!" என்று சொன்ன போது, ரஸிக மணி டி. கே. சி. அவர்கள் "பலே! பலே!" என்று ஆர்ப்பரித்து, "பள்ளிக்கூடத்துக்கு வந்த பிறகு பிள்ளைகளுக்கு மூளை எப்படி இருக்கும்?" என்றார்கள்.

துஷ்ட மந்திரியாக நடித்தவர் தமக்குக் கொடுத்திருந்த பாத்திரத்தின் இயல்பை உணர்ந்து பிரமாத ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தார்.

நாடகத்தில் எல்லோருடைய மனதையும் அபிப்பிராய பேதமில்லாமல் கவர்ந்தது, மந்திரவாதியின் நடிப்பும், வயிற்று வலியால் கஷ்டப்பட்ட ஐயங்கார் சுவாமிகளின் நடிப்புந்தான். மந்திரவாதியாக நடித்தவர் உயர்தர நடிகர். அவருடைய கண்கள் சுழலும் சுழற்சியிலே, கைகள் வீசும் வீச்சிலே, கால்கள் போடும் குதியிலே, வார்த்தைகளின் அழுத்தத்திலே, உண்மையான பாவத்தையும் உயர்தர ஹாஸ்யத்தையும் கண்டோம். "ஓம், ரீம்-ரீங்-டாம்-டோம்-தம்-தம்" என்று அவர் போட்ட போடு இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வயிற்று வலி ஐயங்காராக நடித்தவரின் முக பாவங்கள் எங்கள் எல்லோருடைய மனதையும் மிகவும் கவர்ந்தன. பாவத்தின் நயங்களை அறிந்த கலா ரஸிகர் டி. கே. சி. மிகவும் பாராட்டினார்கள்.

சிங்கத்தின் மீது ஏறிக்கொண்டு மணிகண்டன் புலிகளைக் கூட்டிக் கொண்டு வரும் காட்சி மிகக் கவர்ச்சிகரமாக இருந்தது. புலிக்கூட்டம் வந்ததைக் கண்டு ஜனங்கள் எல்லோரும் பயந்து ஓடியதும் பலவாறு பேசியதும் இயற்கையாகவும் ரஸிக்கும்படியாகவும் இருந்தன.

வைத்தியர்களாக வந்தவர்களில் ஒருவன், "பித்தம் தூக்குது, சுரம் அமுக்குது, வாதம் தூக்குது, காசம் அமுக்குது" என்று இது தூக்க அது அமுக்க, அது தூக்க இது அமுக்க, எங்களை எல்லாம் ஒரே சிரிப்புக் கடலில் அமுக்கி விட்டான்!

"கலை என்றால் உணர்ச்சிதனைக் கவர வேண்டும், களிப்பூட்டி அறிவினைப் போய்க் கவ்வவேண்டும்" என்று நாமக்கல் கவிஞர் சொல்வதுபோல, ஐயப்பனில் நாங்கள் கடைசியாகக் கண்ட காட்சி எங்கள் உள்ளத்தையும் உணர்ச்சியையும் கவர்ந்து கவ்வி விட்டது. நூற்றுக் கணக்கான ஜனங்கள் மூட்டை முடிச்சுகளைத் தலையில் தூக்கிக் கொண்டு வரிசை வரிசையாக, "சாமி! சரணம் ஐயப்பா!" "ஹரிஹர சுதனே ஐயப்பா!" "ஐயப்பா!" "சாமியோ!" "சாமியோ! ஐயப்பா!" என்று கோஷித்துக் கொண்டு சபரிமலைக்குச் சென்ற காட்சி சபையில் ஒரு பெரிய கிளர்ச்சியையும் பரபரப்பையும் உண்டாக்கி விட்டது.

லட்சக்கணக்கான மக்கள் கூடி நின்று, "அண்ணாமலைக்கு அரோகரா!" என்று கோஷிக்கும்போது பக்திப் பிரவாகத்தில் கிளம்பும் இதய ஒலியும், பதினாயிரக்கணக்கான தேசபக்தர்கள் கூடி "வந்தேமாதரம்" என்று கோஷிக்கும் போது உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சிப்பெருக்கும், "சரணம் சாமி ஐயப்பா!" என்ற மேற்படி கோஷத்தினால் அந்தசபையிலே ஏற்பட்டது. இதைக் காட்டிலும் நவாப் ராஜமாணிக்கம் அவர்களுக்கு வேறு என்ன வெற்றி வேண்டும்?

ஜங்ஷனில்? நான் கல்கியைப் பார்த்துச் சொன்னேன்:—"அவ்வளவு முக்கியமான பொருளைச் 'சோடா' என்று 'டா' போட்டுப் பேசினால் அது கிடைக்குமா? 'டா' போடுவது என்றால் பாட்டிலேதான் போடலாம். ஒரு பொதுக் கூட்டத்தில் நான் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு கிழவர் என் எதிரில் உட்கார்ந்து தூங்கி விழுந்து கொண்டிருந்தார். உடனே நான்,

'என்ன உறக்கமடா! — உனக்கு
என்ன மயக்கமடா?'

என்ற நாமக்கல் கவிஞரின் பாட்டைப் பெருங்குரலில் பாடினேன். அவ்வளவுதான்! அந்தக் கிழவர் 'படார்' என்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்!" என்று சொல்லிக் கொண்டே, கிழவர் நிமிர்ந்து உட்கார்ந்தது போல் நானும் நிமிர்ந்து உட்கார்ந்து காட்டினேன். அப்போது 'படார்' என்று என் தலையில் இடித்தது! "ஓஹோ! ரயிலில் மேல் வீட்டில் உட்கார்ந்திருக்கிறோம்" என்று நினைவு வந்தது. இவ்வளவு நேரம் மேலிடத்தில் இருந்தது போதுமென்று கீழே இறங்கினேன். அதே சமயத்தில் சூரியன் அரவம் விழுங்காமலும் அச்சமரம் இற்று வீழாமலும் வேறு வழி செல்லாமலும் திண்டுக்கல்லுக்குச் சமீபமாகக் கிழக்கில் உதித்தான்!

* * *

மதுரை ஜங்ஷனில் வண்டி நின்ற போது. பின் பக்கமாக ஒரு பிச்சைக்காரப் பெண் வந்து, "ஐயா, முதலாளி! ஐயா, முதலாளி!" என்று கல்லும் கரையும்படி கதறினாள். "இந்தப் பெண்ணுக்கு ஜோசியம் தெரியும்போலிருக்கிறது. இல்லாவிட்டால், 'ட்ரோஜன்' செட்டியார் இந்த வண்டியில் இருப்பது இந்தப் பெண்ணுக்கு எப்படித் தெரிந்தது?" என்றார் கல்கி. 'ட்ரோஜன்' செட்டியாரோ சட்டைப் பைக்குள் கையைச் செலுத்தி, அகப்பட்டது என்ன என்பதை எங்களிடம் காட்டாமல் அந்தப் பெண்ணின் நீட்டிய கையில் போட்டார். அவள் உடனே அங்கிருந்து நகர்ந்து அடுத்த வண்டிக்குப் போய், "ஐயா! முதலாளி!" என்று கதற ஆரம்பித்தாள்.

"அடாடா! இந்தச் சமயம் இங்கே ரஸிகமணி டி. கே. ஸி. இல்லையே!" என்று வருத்தப்பட்டோம். இருந்திருந்தால் "முதலாளி" என்ற தமிழ் வார்த்தையின் அழகையும் பாவத்தையும் பண்பாட்டையும் பற்றி எவ்வளவோ சொல்வார்களே! "ஐயா, முதலாளி!" என்ற தமிழ் வார்த்தைக்குப் பதிலாக "ஓ! காபிடலிஸ்ட்!" (Oh Capitalist!) என்று அந்தப் பெண் அழைத்திருந்தால், எப்படியிருக்கும்? "முதலாளி" என்ற வார்த்தை எவ்வளவு கனிவாக இருக்கிறது? "காபிடலிஸ்ட்" என்னும் வார்த்தை எவ்வளவு கொடூரமாகத் தொனிக்கிறது?

இப்படியாகத் தமிழையும் ரஸிகமணி டி. கே. ஸி. அவர்களையும் பற்றியே அடிக்கடி பேசிய காரணத்தினால் "தென்காசி எப்போது வரும்?" என்ற பரபரப்பு எங்கள் எல்லாருக்கும் உண்டாகி விட்டது. அந்தப் பரபரப்பு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸுக்கும் உண்டாகியிருந்தது என்பதைத் தென்காசி ஸ்டேஷனில் வண்டி நின்றதும் தெரிந்து கொண்டோம்.

* * *

தென்காசி பிளாட்பாரத்தில் டி. கே. ஸி. அவர்களும் அவருடைய சீடர்களான ஸ்ரீ பி. ஸ்ரீ. சுப்பராஜு முதலியவர்களும் கும்பலாக நின்று கொண்டிருந்தார்கள்.

ரயிலை விட்டு நாங்கள் இறங்கியதும், "ரயில் இன்றைக்குச் சீக்கிரம் வந்துவிட்டதே!" என்று டி. கே. ஸி. சொன்னார்கள்.

இப்படி அவர்கள் இரண்டு மூன்று தடவை கூறவே, ரயிலைப் பற்றிய ஒரு விகடத் துணுக்கைச் சொல்ல ஆரம்பித்தேன்.

திருநெல்வேலி திருச்செந்தூர் ரயில் பாதையில் சாதாரணமாக ரயில்கள் குறித்த நேரத்துக்கு வருவது கிடையாது. ஒரு நாள் எதிர்பாராத விதமாகச் சரியான நேரத்துக்கு ரயில் வந்து விட்டது. ரயிலுக்காகக் காத்திருந்த ஜனங்கள் சந்தோஷம் தாங்காமல் என்ஜின் டிரைவரைப்



ஹரிஹரசுதனே! ஐயப்பா!

ஒரே ஒரு சுதந்திரம்

விந்தன்

எங்கள் கிராமத்தில் எனக்குக் கொஞ்சம் நிலம் இருக்கிறது. அந்த நிலம் எங்களுக்கு எவ்வாறு பரம்பரை பாத்தியமாக இருந்து வந்ததோ, அதே மாதிரி இசக்கி முத்துக் கௌண்டன் குடும்பத்தாருக்கும் 'வார' வேலை செய்வதற்குப் பரம்பரை பாத்தியமாக இருந்து வந்தது!—காரணம், எங்கள் கிராமத்துப் பொருளாதார நிலை அத்தனை வாயு வேக மனோவேகத்துடன் முன்னேறிக் கொண்டிருந்ததுதான்! — அதாவது, மிராசுதார்கள் என்றைக்கும் மிராசுதார்களாகவே இருந்து வந்தனர்; 'வார'த்துக்கு வேலை செய்பவர்கள் என்றைக்கும் 'வார'த்துக்கு வேலை செய்பவர்களாகவே இருந்து வந்தனர்!

சென்ற தை மாத அறுவடையின் போது, அருகே யிருந்து கவனித்துக் கொள்வதற்காக நான் கிராமத்துக்குப் போயிருந்தேன். வயலில் மும்முரமாக வேலை நடந்து கொண்டிருந்தது. களத்து மேட்டில் நின்றபடி நான் வேலையாட்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்களில் ஒருவன் என் கவனத்தைக் கவர்ந்தான். அதற்கு முன்னால் அவனை எங்கேயோ பார்த்த மாதிரி யிருந்தது. 'எங்கே பார்த்திருப்போம்?' என்று நான் சிந்திக்கலானேன்.

★

ஆம், அந்தச் சம்பவம் என் ஞாபகத்துக்கு வந்து விட்டது. அவன் பெயர் சோலையப்பன். சென்ற வருஷம் சித்திரை மாதம் நான் கிராமத்துக்கு வந்திருந்த போது, என் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கி யிருந்தேன். அவருடைய மனைவி யாருக்கு முன் யோசனையுடன் காரியம் செய்வதில் அலாதி ஆவல். புது இடம் என்பதற்காக, நான் எங்கே கூச்சப்பட்டுக் கொண்டு கொஞ்சமாகச் சாப்பிட்டுவிட்டு எழுந்துவிடப் போகிறேனோ என்று அந்த அம்மையார் எனக்கு முன்கூட்டியே இரண்டு வேளைக்கு ஆகக்கூடிய சாதத்தை ஒரே வேளையில் படைத்து விட்டார்! நானும் என்னால் ஆனவரை 'ஒரு கை' பார்த்தேன்; என்ன பார்த்தும் என்னால் எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட முடியவில்லை. பாதிச் சாதம் அப்படியே மிஞ்சிப் போய்விட்டது. சொந்த வீடா யிருந்தால் புருஷன் என்னதான் தீராத நோய்க்கு ஆளாகி யிருந்தாலும் அவனுடைய எச்சில் சாதத்தைச் சாப்பிடுவதும் 'பதிவிரதா தர்ம'ங்களில் ஒன்று என்று நினைக்கும் அப்பாவி மனைவி ஒருத்தி யிருப்பாள்! விருந்துக்கு வந்த வீட்டில் அம்மாதிரி யார் இருக்கிறார்கள்? ஆகவே, நான் அந்த இலையைத் தூக்கிக் கொண்டு, நாயைத் தேடிக் கொண்டு, தெருவை நோக்கி நடையைக் கட்டினேன்.

எனக்கு எதிரே வந்த நண்பரின் சம்சாரம், "ஐயய்யோ! இதென்ன, இது? உங்களை யார் இலையை எடுக்கச் சொன்னார்கள்?" என்று பதட்டத்துடன் கேட்டாள்.

அன்னதானம் செய்வதிலுள்ள புண்ணிய மனைத்தும் எச்சில் இலையை எடுத்துப் போடுவதில்தான் அடங்கி யிருக்கிறது என்பது அந்த அம்மாளின் நம்பிக்கை!

'உண்டுண் டுறங்குவதே யல்லாது வேறொன்றும் கண்டிலாத அடியார்'கள், தங்களுக்கு இயற்கையாயுள்ள சோம்பேறித்தனத்தால், புண்ணியத்தை வியாஜமாக வைத்துக் கொண்டு எச்சில் இலையை எடுத்துப் போடும் வேலையைக்கூட அன்னதானம் செய்பவர்கள் தலையிலேயே கட்டி விட்ட கதையை. அந்த அம்மாள் இந்த 'அணுகுண்டு சகாப்த'த்தில் கூட அறியாமலிருந்தது ஆச்சரியமாய்த்தா னிருந்தது!

"பரவாயில்லை, இருக்கட்டும், அம்மா!" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே நான் தெருவுக்கு வந்தேன். என் கையிலிருந்த இலையைக் கண்டதும் சாலையோரத்தில் நின்று கொண்டிருந்த இரண்டு ஜீவன்கள் என்னை நோக்கி ஓட்டமாய் ஓடி வந்தன. அவற்றில் ஒன்று சொறி நாய்; இன்னொன்றுதான் பெயருக்கு 'மனித'னாகப் பிறந்திருந்த அந்தச் சோலையப்பன்!

"சாமி, சாமி! அந்த இலையை இப்படிக் கொடுங்க, சாமி! கீழே போட்டுடாதீங்க, சாமி!" என்று கெஞ்சினான் அவன்.

அவனுக்குப் பக்கத்திலே அந்தச் சொறி நாய் வாயைப் பிளந்துகொண்டு, நாக்கை



நீட்டிக் கொண்டு, வாலை ஆட்டிக்கொண்டு, என்னை நன்றியுடன் பார்த்துக் கொண்டு நின்றது.

அந்த நாயைப்போலவே அவனும் என்னை நன்றியுடன் பார்த்தான்; வாயைத் திறந்தான்; நாக்கை நீட்டினான். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்: நாய் வாலை ஆட்டிற்று; அவன் ஆட்டவில்லை!—அதுகூட அவன் குற்றமில்லை; பகவானின் குற்றம். என்ன இருந்தாலும் அவனுக்கு வால் வைக்காமற் போன 'கருணை' அந்தக் 'கருணைக் கடலை'ச் சேர்ந்ததுதானே?

இந்த மனிதர்களுக்கு ஒரு விசித்திரமான மனோபாவம். என்னைப் போன்ற—அதாவது, பணத்தைக் கொண்டு எந்த விதத்திலும் சாப்பாட்டுக்கு வசதி செய்து கொள்ளக் கூடியவர்களைக் கண்டால் அவர்கள் வருந்தி வருந்தி விருந்துக்கு அழைக்கிறார்கள்; மறந்தால் ஏனோ கோபம் கூட வந்துவிடுகிறது! ஆனால், இந்தச் 'சோலையப்பன்கள்'—அதாவது, பணத்தைக் கொண்டு எந்த விதத்திலும் சாப்பாட்டுக்கு வசதி செய்துகொள்ள முடியாதவர்கள் — வழியில் வாசலுக்கு வந்து ஒரு கை சோறு கேட்டால்கூட எரிந்து விழுகிறார்கள்!—ஏன் இப்படி?

அவனைக் கண்ட மாத்திரத்தில் இப்படியெல்லாம் அலை மோதிய என் உள்ளத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "மனிதனாகப் பிறந்த உனக்கு, கேவலம் இந்த எச்சில் இலைக்காக அந்த நாயுடன் போட்டியிடுவதற்கு வெட்கமா யில்லையா?" என்று கேட்டேன்.

இந்தக் கேள்விக்கு நியாயமாகப் பதில் சொல்லியிருக்க வேண்டுமானால், "எனக்கு என்ன சாமி வெட்கம்? இதுக்காக வெட்கப்பட வேண்டியவங்க, ராசாங்கத் தாருதானே?" என்று அவன் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவன் அவ்வாறு சொல்லவில்லை. "வெட்கப்பட்டா முடியுமா, சாமி! வயிறுன்னு ஒண்ணு இருக்குதுங்களே!" என்றான்.

"அதற்கு எங்கேயாவது வேலை செய்வது!"

"கெடைச்சாத்தானே?"

"ஏன் கிடைக்காது?"

"அறுவடை காலமா யிருந்தா எங்கேயாச்சும் வேலை கெடைக்கும். இப்பத்தான் வெய்யில் பட்டையை உரிக்குதுங்களே!"

"உனக்காக வருஷம் முந்நூற்று அறுபது நாளும் அறுவடை காலமா யிருக்குமா, என்ன? அறுவடை வேலை கிடைக்கும்போது அறுவடை வேலை செய்ய வேண்டும்; மற்ற சமயங்களில் கூலி வேலை, கீலி வேலை ......"

"கூலி வேலை நினம் நினமாக் கெடைக்குதுங்க? எப்பவோ ஒரு சமயம் கெடைக்கும். அப்போ செய்யறதுதானுங்க! எந்த வேலையும் கெடைக்காதப்போதான் இப்படி நாய்க்குப் போட்டியா வந்து நிக்கிறது!" என்றான் அவன்.

என் வாய் அத்துடன் அன்று அடைத்துப் போயிற்று. பேசாமல் அவன் ஏந்திய கையில் எட்டணாவை எடுத்துப் போட்டு ஏதாவது வாங்கித் தின்று பசியாறும்படிச் சொன்னேன். அதைப் பெற்றுக் கொண்டு

அவனும் அந்த இடத்தை விட்டு அப்பால் நகர்ந்தான். நானும் கையிலிருந்த இலையை அந்த நாயின் முன்னால் எறிந்து விட்டு உள்ளே வந்தேன்.

★

இந்தச் சம்பவம் என் ஞாபகத்துக்கு வந்ததும், நான் சோலையப்பனின் பிற்கால வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கலானேன்.

"இந்த அறுவடை வேலை முடிந்ததும் அவன் வழக்கம்போல் எச்சில் இலைக்கு நாயுடன் போட்டி போட வேண்டியதைத் தவிர வேறு வழியே கிடையாதா?" என்ற கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது. சிறிது நேரத்துக்குப் பிறகு, "ஏன் இல்லை? அப்படிச் செய்தால் என்ன?" என்று என் வாய் முணுமுணுத்தது.

உடனே சோலையப்பனைக் கூப்பிட்டு, "உனக்கு என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டேன்.

அவன் ஒருமுறை என்னை உற்றுப் பார்த்து விட்டு, "தெரிகிறதுங்க!" என்றான்.

"சாயந்திரம் வேலை முடிந்ததும் என்னை வந்து பார்க்கிறாயா?"

"பார்க்கிறேனுங்க!"

"சரி, போ!" என்று சொல்லிவிட்டு நான் என் நண்பரின் வீட்டுக்குத் திரும்பினேன்.

அன்று மாலை அவன் வந்தான்.

"என்ன, சோலையப்பா! உனக்குப் படிக்கத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"ஏதோ கொஞ்சம் தெரியுங்க. மதுரை வீரன் கதை, தேசிங்கு ராசன் கதை இதெல்லாம் படிப்பேனுங்க!"

"தேவலையே, அவ்வளவு தூரம் படித்திருக்கிறாயா?"

"எல்லாம் அந்தக் காந்தி வாத்தியாரு புண்ணியமுங்க!"

"அது யார், காந்தி வாத்தியார்?"

"அவர் இப்போ செத்துப் பூட்டாருங்க! நல்லவரு, பாவம்! அவரு காந்தி, எங்களைத்தவரை யெல்லாம் முன்னுக்குக் கொண்டாரச் சொல்றாருன்னு சேரிக்கு வந்து, எங்களுக்கெல்லாம் படிப்புச் சொல்லிக் கொடுப்பாருங்க! நாங்க அவரை 'காந்தி வாத்தியாரு, காந்தி வாத்தியாரு'ன்னுதான் கூப்பிடுவோம்!"

"ஓஹோ!—சரி, நான் ஒன்று சொல்கிறேன், கேட்கிறாயா?"

"கேட்காம என்னங்க?"



"இந்த அறுவடை வேலை முடிந்ததும் நீ வேலை வெட்டி கிடைக்கவில்லையே என்று பழையபடி எச்சில் இலைக்கு நாயுடன் வந்து நிற்காதே! நான் உனக்கு ஒரு கடை வைத்துத் தருகிறேன்."

"என்ன கடைங்க?"

"ரொட்டி, பிஸ்கட் எல்லாம் லாபத்துக்கு வாங்கி விற்கிறது......"

"ஐயய்யோ! இதென்ன கூத்துங்க! எங்கேயாச்சும் பறப்பயல்......"

"என்னடா, அப்படிச் சொல்கிறாயே! அதெல்லாம் அந்தக் காலம். இப்போது பார்த்தாயா, எங்கே பார்த்தாலும் உங்களுக்குக் கோவிலைத் திறந்து விடுகிறார்கள்!"

"ஆமாம், ஆமாம்! அன்னிக்குக் கூட அங்கே எங்கேயோ கோவிலைத் திறந்து

விடறுங்கன்னு 'தர்மகார்த்தா ஐயா' வந்து என்னைக் கூப்பிட்டாரு. எப்பவோ ஒரு நாளைக்கு அபூர்வமாக் கெடைச்ச வேலையை விட்டுட்டு நான் எங்கே கோயிலுக்குப் போறது, சாமி? அந்த வேலையே எனக்கு அப்போ 'சாமி'மாதிரி யிருந்தது; தினந் தினம் அதன் 'தரிசனம்' கெடைச்சாத் தானே எங்க வயித்துக்குக் கஞ்சி? அதாலே இன்னொரு நாளைக்குக் கோயிலைப் பார்த்துக்கலாம்னு நான் போகலே!— அது சரி, சாமி! அதுக்குத்தான் காந்தி என்னமோ சொன்னாராமே......?"

"என்ன சொன்னாராம்?"

"ஹரிஜனங்களுக்குக் கோயிலைத் திறந்துவிட்டா மட்டும் போதாது; இத்தனை நாளா அவங்களை ஒதுக்கி வச்ச ஒசந்த சாதியாரு இன்னும் அவங்களுக்கு எவ்வளவோ செய்யணும்னு!"

"அதற்காகத்தான் நான் உனக்கு இந்த உபகாரம் செய்கிறேன் என்கிறேன்......"

"என்னமோ செய்யுங்க, சாமி! ஒங்க புண்ணியத்திலே பொழைச்சுப் போறேன்!"


"சரி, நான் பட்டணத்துக்குப் போகு முன் உனக்கு அந்தக் கடையை வைத்துக் கொடுத்துவிட்டுப் போகிறேன், போ!" என்றேன். அவன் போய்விட்டான்.

★

சோலையப்பனுக்கு நான் அளித்த வாக்குறுதியை மீறவில்லை. எங்கள் கிராமத்துக்கு அடுத்தாற்போலிருந்த ஒரு சிற்றூர்க் கடை வீதியில் ஒரு நல்ல இடத்தைத் தேடிப் பிடித்தேன். கண்ணாடி பீரோக்கள், குப்பிகள் முதலியவற்றை வாங்கிக் கடையை அழகாக ஜோடித்தேன். ஒரு நூறு ரூபாய்க்குப் பட்டணத்திலிருந்து ரொட்டிகள், பிஸ்கட்டுகள் எல்லாம் வாங்கி அவற்றில் அடுக்கினேன். 'சோலையப்பன் ரொட்டிக் கடை' என்று ஒரு 'போர்'டையும் எழுதி, கடையின் வாசலில் தொங்க விட்டேன். பிறந்ததிலிருந்து சட்டையையே காணாத அவன் உடம்பையும் சட்டை தைத்துப் போட்டு மூடினேன். 'நாம் வாங்கிய சரக்குகளின் விலை இவ்வளவு, நீ விற்க வேண்டிய விலை இவ்வளவு' என்று சொல்லிக் கொடுத்தேன். 'அப்பாடா! எப்படியோ அவன் விதியை மாற்றியமைத்துவிட்டோம்' என்ற திருப்தியுடன் சென்னைக்குத் திரும்பினேன்.

என்னுடைய திருப்தி நெடுநாள் நீடித்திருக்கவில்லை. நான் ஊருக்குத் திரும்பிய இரண்டு வாரங்களுக்கெல்லாம் சோலையப்பனிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில், அவன் என்னை உடனே புறப்பட்டு வரும்படி எழுதியிருந்தான். அவனுடைய அவசர அழைப்பை ஏற்றுக் கொண்டு, நானும் அவசர அவசரமாக என் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்.

முதலில் சோலையப்பனின் ரொட்டிக் கடைக்குத்தான் சென்றேன் என்று சொல்ல வேண்டியதில்லை. அந்தக் கடையைப் பார்த்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நான் வாங்கி வைத்துவிட்டுச் சென்ற ரொட்டிகள், பிஸ்கட்டுகள் எல்லாம் அப்படி அப்படியே இருந்தன.



மனைவி:—இது என்ன வேஷம்?

கணவன்:— சோபா மெத்தைத் துணியையும் கோட்டுத் துணியையும் ஒரே சமயத்தில் தைக்கக் கொடுத்தேன். அந்தப் பாழாய்ப் போன தையற்காரன் இப்படி மாற்றித் தைத்துவிட்டான்!

"என்ன, இத்தனை நாளாக ஒன்றுமே விற்கவில்லையா?" என்று கேட்டேன்.

"அது எப்படிங்க விற்கும்?"

"ஏன், இந்தக் கிராமத்தில் ரொட்டி, பிஸ்கட் தின்பவர்கள் யாருமே இல்லையா?"

"இல்லாம என்னங்க? அதோ, அந்த முதலியாரு ரொட்டிக் கடை இருக்குதுங்களே, அதிலே தினம் தினம் எம்மா வியாபாரம் ஆவுது, தெரியுங்களா?"

"பின்னே என்ன? ஏன் உன் கடையிலே மட்டும் வியாபாரம் ஆகவில்லை?'

"என்ன இருந்தாலும் நான் பறையன் பறையன்தானுங்களே? என் கடையிலே யாராச்சும் ரொட்டி, பிஸ்கட் வாங்கணும்னு அவங்க பறையர்களாத்தான் இருக்கணும்! அவங்களுக்குத்தான் கூழுக்கே பஞ்சமாச்சுதுங்களே, அவங்க எங்கே ரொட்டி, இட்டி வாங்க வரப் போறாங்க? வந்தா ஒசந்த சாதிக்காருதான் வரணும். அவங்க என் கிட்ட எங்கேயாச்சும் வருவாங்களா? — ஆனா, ஒண்ணு மட்டும் சொல்லணுங்க: அந்த மட்டும் அவங்க என் கடைக்கு வராம இருந்ததோடே நின்னுங்களே! 'பறப் பயலுக்கு இங்கே என்னடா ரொட்டிக் கடை?'ன்னு என்னையும் அடியா அடிச்சுப் போட்டு, இந்தக் கடையையும் காலி பண்ணும்! அதைச் சொல்லுங்க!"

"என்னடா, திருப்பித் திருப்பிப் பறையன், பறையன் என்கிறாயே?" என்று நான் அலுத்துக் கொண்டேன்.

"நானுங்க சொல்றேன்? இந்தப் பதினஞ்சு நாளா என் கடையை யாரும் எட்டிப் பார்க்காம இருக்கறதிலிருந்தே அது தெரியலீங்களா?"

"சரி, அப்படி யென்றால் நீ என்னதான் சொல்கிறாய்?"

"இது உங்க கடை; இதிலே போட்டிருக்கற பணம் உங்க பணம். நீங்களே இந்தக் கடையை எடுத்துக்குங்கோன்னு சொல்றேன்!"

"இதென்னடா, வேடிக்கையாயிருக்கிறதே! உனக்குத் தினசரி வேலை கிடைப்பதற்குத்தான் வழியில்லை; யாருடைய உதவியையாவது கொண்டு, சொற்ப முதலில் ஒரு ரொட்டிக் கடை, மிட்டாய்க் கடை இப்படி ஏதாவது வைத்துப் பிழைத்துக் கொள்வதற்குக் கூடவா உனக்குச் சுதந்திர மில்லை?"

"ஏதுங்க, யோசித்துப் பார்க்கப்போனா எனக்கு இருப்பது ஒரே ஒரு சுதந்திரம் தானுங்களே?"

"அது என்னடா, ஒரே ஒரு சுதந்திரம்?"

"வேறே என்னங்க, தற்கொலை செய்து கொள்ளும் சுதந்திரம்தான் அது!" என்று சொல்லும்போதே ஏனோ அவன் கண்களில் நீர் சுரந்தது.

அதைப் பார்க்கச் சகிக்காமல் நான் முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டேன்.



வித்தியாசம்

"ஏழைக்கும் பணக்காரனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?"

"ஏழை அடுத்த வேளைச் சாப்பாட்டைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பான்; பணக்காரன் நேற்று தான் சாப்பிட்டது ஜீரணமாக வில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பான்!"

★

ஒன்றுமில்லை!

சிறுவன்:—அம்மா! தெருவில் ஒரு கிழவன் இரையறானே, அவனுக்கு அரையணா போடட்டுமா?

தாயார்:—போடேன். ஆமாம், அவன் என்ன சொல்லி இரைகிறான்?

சிறுவன்:— ஒன்றுமில்லை; "பஜன், பஜன்" என்றுதான் இரைகிறான்.

★

சிரமம் எதற்கு?

பையன்:—அம்மா! அப்பா, என்ன செய்கிறார்?

தாயார்:—நாவல் எழுதுகிறார்டா!

பையன்:— ராத்திரியும் பகலுமாக எழுதுகிறாரே!

தாயார்:—ஆமாம்; அது அவ்வளவு கஷ்டமான காரியம்!

பையன்:—ஏன் அம்மா, அப்பா அவ்வளவு கஷ்டப்படணும்? ஒரு ரூபாய் கொடுத்தால் புஸ்தகக் கடையில் ஒரு நல்ல நாவலாக வாங்கி விடலாமே!

★

தனிமை யில்லை!

காதலன் (நாடக மேடையில்):—கண்மணி! இங்கே நாம் தனியாகத்தானே இருக்கிறோம்? உன் மனதிலுள்ளதைத் தாராளமாய்ச் சொல்லேன்!

சபையில் ஒருவர்:—ஏன், ஐயா! நாங்கள் இத்தனை பேர் இங்கே இருக்கிறோமே, உமக்குக் கண் தெரியவில்லையா?

★

நிகழ்காலம்!

"ஏன் அப்பா, இவ்வளவு உற்சாகம் குன்றி சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாய்?"

"என் எதிர்காலத்தை நினைத்தால் மனதுக்குச் சோர்வு உண்டாகிறது!"

"ஏன்?"

"நிகழ் காலம் இருக்கிற லக்ஷணத்தான்!"



நெஞ்சழுத்தக்காரர்

பகீரதன்

மருந்துக் கடை குமாஸ்தா மாரிசாமியை அவருக்குத் தெரிந்தவர்கள் எல்லோரும் 'நெஞ்சழுத்தக்காரர்' என்று தான் சொல்லுவார்கள். அதற்கேற்றாற் போல், அந்த மனிதருக்கு அடிக்கடி நெஞ்சை வலிப்பதும் உண்டு.

அவருடைய மனைவி, "நீங்கள் தான் மருந்துக் கடையிலேயே வேலையாயிருக்கிறீர்களே, இந்த நெஞ்சு வலிக்கு ஏதாவது நல்ல மருந்தாக வாங்கிச் சாப்பிடக் கூடாதோ?" என்பாள்.

"ஆமாம், மாதம் பிறந்தால் வாங்கும் நாற்பது ரூபாய்க் காசு தேதி பதினைந்தாவதற்குள் செலவாகி விடுகிறது. இந்த லட்சணத்தில் மருந்து எப்படி வாங்கிச் சாப்பிடுவதாம்? நெஞ்சில் வலி வந்தால் கொஞ்ச நேரம் இருந்து தானே போகிறது!" என்பார் மாரிசாமி.

"என்ன இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு நெஞ்சழுத்தம் கூடாது!" என்பாள் அவர் மனைவி.

அன்று கடைக்கு வந்த தபால்களையெல்லாம் பிரித்துக் கொண்டிருந்தார் மாரிசாமி. ஒரு பிரபல மருந்துக் கம்பெனியிலிருந்து பின்வருமாறு ஒரு கடிதம் வந்திருந்தது:

"என்னதான் நாட்பட்ட நெஞ்சு வலியாக இருந்தாலும் சரி, பத்தே நிமிஷத்தில் குணம் தெரியும். ஒரு பாட்டில் மருந்து விலை ரூபாய் ஐந்துதான். உங்கள் கடைக்கு எவ்வளவு வேண்டுமென்று எழுதவும்"

என்று அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.

இதைப் படித்ததும் மாரிசாமியின் நெஞ்சு சந்தோஷத்தால் விம்மிற்று. உடனே பர்ஸில் கையை விட்டுப் பார்த்தார். சில்லறையாக எட்டணா இருப்பதைக் கண்டதும் அவருடைய நெஞ்சு உலர்ந்து போயிற்று! ஆனாலும் நெஞ்சைத் திடப்படுத்திக்கொண்டு அந்த மருந்துக் கடைக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார்:—

"ஐயா, தங்களுடைய பெயர் பெற்ற நெஞ்சு வலி மருந்தைப் பற்றிப் படித்தேன். ரொம்ப சந்தோஷம். எனக்கே நீண்ட நாட்களாக நெஞ்சு வலி இருக்கிறது. ஆகவே, இத்துடன் ஐந்து ரூபாய்க்கு ஒரு 'செக்' அனுப்பியிருக்கிறேன். ஒரு பாட்டில் மருந்தை உடனே அனுப்பிவைக்கவும். அதைச் சாப்பிட்டுப் பார்த்துவிட்டுக் கடைக்கு வேண்டிய மருந்து பாட்டில்களுக்கு எழுதுகிறேன்."

குறிப்பு:—இத்துடன் 'செக்' வைக்க மறந்துவிட்டேன். எவ்வளவோ பெயரும் புகழும் பெற்ற கம்பெனிக்காரர்களாகிய நீங்கள், இதை ஒரு பொருட்டாகக் கருதமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

மாரிசாமி.

இரண்டு தினங்கள் கழிந்து மேற்படி கம்பெனியிலிருந்து மாரிசாமிக்கு ஒரு பார்சல் வந்தது. தன்னுடைய சாமர்த்தியத்தைப் பற்றித் தானே புகழ்ந்து கொண்டு பார்சலைப் பிரித்தார் மாரிசாமி. அதில் ஒரே ஒரு கடிதம் மட்டும்தான் இருந்தது:—

"ஐயா! தங்களுடைய ஆர்டரின்படி ஒரு பாட்டில் நெஞ்சு வலி மருந்தை இத்துடன் அனுப்பிவைத்திருக்கிறோம்."

குறிப்பு:—இத்துடன் மருந்து பாட்டிலை வைப்பதற்கு மறந்து விட்டோம்! எத்தனையோ நாட்களாக நெஞ்சு வலியைப் பொறுத்துக் கொண்டிருக்கும் 'நெஞ்சழுத்தக்கார'ராகிய நீங்கள், இதை ஒரு பொருட்டாகக் கருதமாட்டீர்களென்று நம்புகிறோம்.

● ○ ● ○ ● நல்ல தண்டனை! ● ○ ● ○ ●

காந்திஜி வெகு காலமாகக் காப்பியோ டீயோ சாப்பிடுவதில்லை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம்.

கொஞ்ச காலத்துக்கு முன்பு அவர் டில்லியில் உண்ணாவிரதம் இருந்தபோது தினந்தோறும் வெந்நீரில் குளித்து வந்தார். ஒரு நாள் வழக்கம் போல, அவர் குளிப்பதற்காகத் தொட்டியில் வெந்நீர் விளாவி வைத்திருந்தார்கள். காந்திஜி அந்தத் தொட்டியருகே போனதும் அதிலிருந்த வெந்நீரைப் பார்த்தார். உடனே விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினார். காந்திஜி அப்படிச் சிரிப்பதைப் பார்த்ததும் பக்கத்திலிருந்த ஆண்ட்ரூஸ், "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார். காந்திஜி சிரித்துக்கொண்டே ஏதோ பதில் சொன்னார். உடனே ஆண்ட்ரூஸும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினார்.

என்ன காரணம்?

காலையில், தீனபந்து ஆண்ட்ரூஸுக்குத் தேநீர் போட்டுக் கொடுத்தவர் தவறுதலாகக் காந்திஜி குளிக்கும் வெந்நீரிலே கொஞ்சம் தேயிலையையும் போட்டு விட்டார். அந்த வெந்நீர் முழுவதும் ஒரே தேநீர் நிறத்தில் காட்சி யளித்தது. காந்திஜி அதைப் பார்த்ததும், "எனக்கு நல்ல தண்டனை! நான் தேநீர் குடிக்காமலிருப்பதற்காகத் தேநீரிலேயே என்னைக் குளிப்பாட்டி வைக்கவேண்டும் என்று யாரோ விரும்பினார்கள் போலும்!" என்றார்.



இரு நண்பர்கள்

ஆசிரியர்: **சுதர்சன்** மொழிபெயர்ப்பு: **ரா. விழிநாதன்**

விந்யாசங்கர் சொல்லுகிறான்:

நான் தரையை நோக்கிய வண்ணம், "இல்லை... கம்பெனியில் வேலை அதிகமாயிருக்கிறது!" என்றேன்.

"அப்படியானால் ஒரு 'அஸிஸ்டெண்ட்' போட்டுக் கொள்ளுகிறதுதானே? எல்லா வேலையையும் உங்களை யார் செய்யச் சொன்னார்கள்?"

நான் சிரித்துக் கொண்டே, "நான் 'அஸிஸ்டெண்ட்' வேண்டுமென்று கேட்டால் என் சீட்டே கிழிந்து விட்டாலும் கிழிந்து விடும். 'போ அப்பா, நீ வீட்டுக்கு!' என்று உங்கள் கணவர் சொன்னாலும் சொல்லிவிடலாமல்லவா?" என்றேன்.

"அவர் அப்படிப்பட்ட மனிதர் அல்ல. நீங்களாக ஏன் இப்படியெல்லாம் குருட்டு யோசனை செய்து கொள்ளுகிறீர்கள்?"

"நான் என்னவோ உள்ள விஷயத்தைத்தான் சொன்னேன்!"

"சரி, அப்படியானால் நீங்கள் ஒன்றும் இதைப் பற்றி அவரிடம் சொல்ல வேண்டாம். நானே அவரிடம் பிரஸ்தாபிக்கிறேன்."

"நீங்கள் இதைப்பற்றி அவரிடம் பிரஸ்தாபிப்பது உசிதமில்லை; நான் உங்களைக் கொண்டு இப்படியெல்லாம் சொல்லச் சொல்லியிருக்கிறேனாக்கும் என்று அவர் எண்ணிவிடுவார்!"

"அப்படி எண்ணாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். உங்களுக்கு அதைப் பற்றி என்ன கவலை? 'ஒருவரிடமே இவ்வளவு வேலையைக் கொடுத்து விட்டுச் செக்கு மாடு மாதிரி அவரை உழைக்கச் சொல்லுவது நியாயமா? ஒன்று, நீங்களும் அவருக்குக் கூட மாட ஒத்தாசை செய்யுங்கள்; இல்லை, அவருக்கு ஒத்தாசைக்கு ஒரு 'அஸிஸ்டெண்ட்'டாவது போடுங்கள்' என்று நானே சொல்லி விடுகிறேன்."

"இது இன்னும் மோசம். 'இவளுக்கு, என் அவன்மீது இவ்வளவு அக்கறை?' என்று அவர் எண்ணுவார். பிறகு அடுக்கடுக்காகச் சந்தேகங்கள் எழும். நீங்களே யோசித்துப் பாருங்கள், 'இது சரியா?' என்று?"

"இப்படியெல்லாம் யோசிக்கப்போனால் உங்கள் கஷ்டம் தீர்ந்தாற் போலத்தான்!"

"இம்மாதிரி நிலையில் மனிதன் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருப்பதுதான் நியாயம்."

"பேசாமல் இருப்பது என்றால் பயங்கொள்ளித்தனம் என்றுதான் அர்த்தம்!"

நான் பேச்சை மாற்ற எண்ணி, "இந்தப் பயங்கொள்ளித்தனம்தான் கெட்டிக்காரத்தனம்; புத்திசாலித்தனம்!" என்றேன்.

ரூபாராணி இதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல், "நீங்கள் என் ஸ்தானத்தில் இருந்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமே செய்யமாட்டேன். நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டே இருப்பேன்!"

ரூபாராணி என்னை ஒரு முறை குறை கூறும் பாவனையில் பார்த்துவிட்டு, ஒரு பெரு மூச்சுடன் தலை குனிந்தாள். 'நீங்கள் இவ்வளவு கல் நெஞ்சராகி விட்டீர்களே' என்று சொல்வது போலிருந்தது அந்தப் பார்வை. "அவளிடம் நம் மனதைத் திறந்து காட்டிவிட வேண்டும். 'நீ என்னை இன்னும் நன்றாகப் புரிந்து

சொன்ன வில்லையே!' என்று தெளிவாக அவளிடம் சொல்லி விடவேண்டும்" என்று நான் எண்ணினேன். ஆனால் என் எழுச்சியை உள்ளூற அடக்கிக் கொண்டு, புறப்படுவதற்காக எழுந்து நின்றேன்.

ரூபராணி, "சற்று உட்காருங்கள். உங்களிடம் ஒரு விஷயம் கேட்கவேண்டும்" என்றாள்.

நான் மறுபடியும் உட்கார்ந்தேன். ரூபராணி வெகு தயக்கத்துடன் எனக்குப் பக்கத்திலிருந்த மேஜையருகே வந்து நின்று, "என்னை நீங்கள் எப்பொழுதாவது நினைப்பதுண்டா?" என்று கேட்டாள்.

இதை ஒரு சாதாரணமான கேள்வி என்று சொல்லி விடுவதற்கில்லை. இதில் என்னை வெறியனாக மாற்றிவிடும் சக்தி வாய்ந்த சாராயம் தோய்ந்திருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். 'இவளிடம் நம் மனதைத் திறந்து எல்லாவற்றையும் சொன்னால் என்ன?' என்று ஒரு கணம் யோசித்தேன். ஆனால் நல்ல வேளை, அப்படியொன்றும் சொல்லி விடவில்லை.

"இல்லையே!" என்று ஒரே வார்த்தையில் சுருக்கமாகக் கூறினேன்.

"என்னை நீங்கள் அறவே மறந்துவிட வேண்டும் என்பதுதான் என் விருப்பமும்!" என்றாள் அவள்.

இதைச் சொல்லும் பொழுது அவள் கண்களைக் கண்ணீர் மறைத்தது. பேச முடியாமல் தொண்டையை அடைத்தது.

நான் என் கைக்கடியாரத்தைப் பார்த்து விட்டு, "போய்வரட்டுமா?" என்றேன்.

ரூபராணி தலையசைத்து 'சரி' என்று பதில் அளித்தாள்.

நான் என் சரீர பலம் பூராவையும் ஒன்று கூட்டிக்கொண்டு எழுந்து நின்றேன். பிறகு சிறிது தயக்கத்துடன், "நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளாமல் இருப்பதாயிருந்தால், ஒரு விஷயம் உங்களைக் கேட்கலாம் என்று எண்ணுகிறேன்" என்றேன்.

ரூபராணி முன்போலவே தரையை உற்று நோக்கிய வண்ணம், "கேளுங்கள்" என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள்.

"இங்கே உங்களுக்கு ஒரு கஷ்டமும் இல்லையே?" என்று கேட்டேன்.

ரூபராணியின் தலை 'இல்லை' என்பதற் கடையாளமாக அசைந்தது.

"அப்படியானால் உங்களுக்கு இந்த வாழ்க்கை பிடித்திருக்கிறது என்று சொல்லுங்கள்!" என்றேன்.

ரூபராணி மிகவும் மெதுவான குரலில் 'ஆம்' என்று பதில் அளித்தாள்.

"அப்பாடா! என் மனத்திலிருந்த ஒரு பெரும் சுமையைத் தாங்கள் இறக்கி விட்டீர்கள்!" என்றேன்.

16. என் இதயராணி!

ஆனால் அது வெறும் பொய். என் மனச் சுமை இறங்கவே யில்லை; அதிகரிக்கத்தான் செய்திருந்தது. "ரூபராணி என் நினைவாகவே இருக்கிறாள். இல்லாவிட்டால் அவள் 'என்னை நீங்கள் எப்பொழுதாவது நினைப்பதுண்டா?' என்று கேட்பாளா!" என்று அடிக்கடி நான் எண்ணுவதுண்டு. ஆனால் நான் செய்ததும் மடத்தனம். "அப்படியானால் உங்களுக்கு இந்த வாழ்க்கை பிடித்திருக்கிறதா?" என்று கேட்க எனக்கு என்ன அப்படி அவசியம் ஏற்பட்டு விட்டது? நான் கேட்ட கேள்வியில், 'எனக்கு இந்த வாழ்க்கை பிடிக்கவில்லை' என்ற அர்த்தம்தான் தானாக தொனிக்கிறதே! அதுமட்டுமா? 'உங்கள் நினைவாகவேதான் நான் இருக்கிறேன்' என்று சொல்வதற்குப் பதிலாக, 'உங்களுக்கு இங்கே ஒரு கஷ்டமும் இல்லையே?' என்று கேட்டேன். போதாய்போதாததற்கு,



"என்னை நீங்கள் எப்பொழுதாவது நினைப்பது உண்டா?"

'என் மனத்திலிருந்த ஒரு பெரும் சுமையைத் தாங்கள் இறக்கி விட்டீர்கள்' என்று வேறு சொன்னேன். ரூபாராணி நன்றாக இதைப் புரிந்துகொண்டிருப்பாள். அவளோ படித்தவள்; படிக்காத பெண்கள்கூட இந்த விஷயத்தைப் புரிந்துகொண்டு விடுவார்களே, அவள் புரிந்து கொண்டிருக்க மாட்டாளா? ஆமாம், இனிமேல் நான் என்ன செய்வது? இங்கே இருப்பதா, அல்லது எங்கேயாவது ஓடிவிடுவதா? ஓடி விடலாம் என்று நினைத்தாலும் மனம் கேட்கமாட்டேன் என்கிறதே! என்னவெல்லாமோ சாக்குப் போக்குக் கூறி என்னை இப்படித் தடுத்து விடுகிறதே இந்த மனம். முன்னெல்லாம் பலவீனம் இப்படி என்னை வாட்டியதே இல்லை. எப்படித்தான் நான் இப்படி ஆனேனோ, எனக்கே புரியவில்லை. நான் எதற்குமே அஞ்சா நெஞ்சனாக இருந்தது ஒரு காலம். இப்பொழுது என்னடாவென்றால் என் நிழலைப் பார்த்துக்கூட நான் பயந்து சாகிறேன். எப்படித்தான் இந்தத் திடீர் மாறுதல் ஏற்பட்டதோ, புரியவில்லை.

அன்றொரு நாள் அம்மா, "எவ்வளவு நாள்தான் நீ இப்படிக் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பாய்?" என்று கேட்டாள். பக்கத்துத் தெருவில் ஒரு பெண்கூட எனக்காகப் பார்த்திருந்தாள் அவள். "அந்தமாதிரி மூக்கும் முழியுமாயிருக்கும் அழகான பெண்ணை நான் இன்றுவரை பார்த்ததேயில்லை. தங்கமான பெண்; பார்த்தாலே பசி, தாகம் எல்லாம் பறந்து போய்விடும். அவ்வளவு நல்ல பெண். ஒன்றும் யோசிக்காதே நீ! 'சரி' என்று சொல்லிவிட்டால் போதும். நான் முடித்து விடுகிறேன்" என்றும் சொன்னாள். ஒரு நாள் வித்யாகுமாரியை எடுத்துக் கொண்டு நான் என் வீட்டுக்குப் போயிருந்தேன். அவளைப் பார்த்ததும் அம்மாவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. "குழந்தை, நீயும் சீக்கிரம் கல்யாணம் செய்து கொள்ளேன். உனக்குக் குழந்தை குட்டிகள் பிறந்து என் கண்ணாலே நான் பார்க்க வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது" என்றாள். 'கிழத்துக்குத்தான் என்ன ஆசை!' என்று எண்ணியவனாய், 'இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொள், அம்மா!" என்று சொன்னேன். இதைக் கேட்டதும் அவள் மனம் ஒடுங்கி விட்டது. ஆனால் என்மேல் என்ன குற்றம்? என் மனம் கேட்டால்தானே? இதே மாதிரிக் கொஞ்ச காலம் ஒத்திப் போட்டு வந்தேன். கடைசியாக ஒரு நாள், "ஒன்று, நான் பார்க்கும் பெண்ணை நீ கல்யாணம் செய்து கொள்; இல்லை, நீயாக ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள். கல்யாணம் செய்து கொள்ளாமல் இப்படியே பிரம்மசாரியாக எவ்வளவு நாள்தான் சும்மா இருப்பாய்?" என்று கடிந்து கொண்டாள். அது மட்டும் அல்ல. "ரூபாராணியை மறந்து விடு. அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது; குழந்தையும் பிறந்து விட்டது. உனக்கென்று அவள் பிறந்திருந்தால், உனக்காகக் காத்துக் கிடக்க மாட்டாளோ? நீ எங்கேயோ ஊர் ஊராகச் சுற்றப் போய் விட்டாய். அவள் நாலு நாள் கூடப் பொறுத்திருந்து பார்க்கவில்லை. தான் கல்யாணம் செய்து கொண்டு விட்டாள். நீ இனிமேல் அவளுக்காக உருகி என்ன பிரயோஜனம்?" என்றும் ஜாடையாகச் சொல்லி விட்டாள்.

எனக்கு ரத்தமே சுண்டி விட்டது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அம்மாவுக்குக்கூட 'நான் ரூபாராணியின் காரணமாகத்தான் கல்யாணம் செய்து கொள்ளவில்லை' என்பது தெரிந்திருக்கிறதே!— அன்று இரவு நான் ஒரு நிமிஷம் கூடக் கண் கொட்டவில்லை புரண்டு புரண்டு படுத்தேன். வாழ்க்கையின் அந்தகாரத்தில் நம்பிக்கை யென்னும் வழியைத் தேடிக் கொண்டிருந்தேன். ஆனால் ஒரு வழியாவது தென்பட்டால்தானே! கல்யாணம் செய்து கொள்ளுவதும் சிரமம்; கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பதும் சிரமம். என்ன செய்வது? அம்மா எல்லாம் தெரிந்தும் தெரியாதவளாக அல்லவா இருக்கிறாள்! இல்லாவிட்டால் என்னை இப்படி உபத்திரவப் படுத்துவாளா?— இதே சிந்தனையில் இரவு இரண்டு மணி அடித்து விட்டது. ஆனால் எனக்குத் தூக்கமே வரவில்லை.

யாரோ 'தட தட' வென்று கதவைத் தட்டினார்கள். 'இந்த இருட்டு வேளையில் யார் கதவைத் தட்டுவார்கள்?' என்று வியப்புடன் சிந்தித்தவாறே எழுந்துபோய்க் கதவைத் திறந்தேன். ரூபாராணி நின்று கொண்டிருந்தாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என் மூளை குழம்பியது. தடுமாற்றத்துடன், "இந்த நடுநிசி வேளையில்......எங்கே புறப்பட்டு வந்தீர்கள்?" என்று கேட்டேன்.

ரூபாராணி உள்ளே வந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். அவளுக்கு மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்கிக் கொண்டிருக்

தது. நடுங்கிய குரலில், "போறுங்கள்; சொல்லுகிறேன்!" என்றான்.

"என்ன, நீங்கள் நடந்தா வந்தீர்கள்?"

"ஆமாம், இன்று எல்லாக் கட்டுப்பாடுகளையும் உதறித் தள்ளிவிட்டு நான் உங்களைத் தேடி வந்துவிட்டேன். இந்த நிமிஷமே நாம் இருவரும் யாரும் அறியாத கண் காணாத இடத்துக்குப் போய்விடுவோம், வாருங்கள்!" என்று நடுங்கிய குரலில் சொன்னாள் அவள்.

இதைக் கேட்ட நான் பேய் அறைந்தவன் போலானேன். ஈனஸ்வரத்தில், "இம்மாதிரி செய்தால் என்ன ஆகும், தெரியுமா?" என்று கேட்டேன்.

"எல்லாம் எனக்குத் தெரியும். நான் ஒன்றும் அப்படி மூளை கெட்டவள் அல்ல!"

"அபகீர்த்திக்கு உள்ளாக நேரிடும். ஞாபகமிருக்கட்டும்!"

"பெரிய பெரிய ரிஷிகள் கூட இந்த அபகீர்த்தியிலிருந்து தப்ப முடியவில்லை. நீங்களும் நானும் எந்த மூலைக்கு?"

"நான் சொல்வதைக் கேள்; இதெல்லாம் வேண்டாம். பேசாமல் வீட்டுக்குத் திரும்பிப் போ! உன் வாழ்க்கையை வீணுகக் கெடுத்துக் கொள்ளாதே! அப்புறம் வருந்த வேண்டி வரும்."

"அப்புறம் வருந்துவதாயிருந்தால் நான் வீட்டை விட்டே புறப்பட்டு வந்திருக்க மாட்டேனே! நீங்களோ ஆண் பிள்ளை! சொல்லுங்கள், உங்களுக்குத் தைரியமிருக்கிறதா? உங்களை நம்பித்தான் நான் துணிய வேண்டும்."

"எனக்கு அவ்வளவு துணிவு கிடையாது!"

"கிடையாதா? அப்படியானுல் எனக்கு உங்கள் கையாலேயே விஷத்தைக் கொடுத்துக் கொன்று விடுங்கள். ஒரேயடியாய் என் தொல்லை தீரட்டும். இனிமேல் அந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்க என்னால் முடியாது! என் வாழ்வு இப்படியே ஒழிந்து போகட்டும்!"

"விஷத்தைக் கொடுத்து உன்னைக் கொன்றுவிட்டு நான் மட்டும் இங்கே இருக்க முடியுமா, என்ன? நானும் உன்னுடன் வரவேண்டியதுதான்!"

"என்னுடன் வருவதற்கு உங்களுக்குச் சம்மதமில்லையென்றால் போங்கள்! நான் எங்கேயாவது குளத்திலோ குட்டையிலோ விழுந்து செத்துத் தொலைகிறேன்!"

"இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்தால் நான் இந்தப் பக்கம் தலைகூடக் காட்டியிருக்க மாட்டேன்!"

"நீங்கள் அப்படிச் செய்திருந்தால், உங்களைக் கல் நெஞ்சன் என்றே நான் நிர்மாணித்திருப்பேன்."

நான் சிறிது நேரம் பேசாமல் இருந்தேன். பிறகு, "ஆமாம், நாம் இப்படிச் செய்தால் நம்மைப் பற்றி நந்தகிசோர் என்ன நினைப்பான்?" என்று கேட்டேன்.

"கொலை செய்யாத தோஷமாக உங்களுக்கு அவர் தீங்கிழைத்தாரே! அப்பொழுது நீங்கள் என்ன நினைப்பீர்கள் என்று அவர் சிறிதாவது சிந்தித்தாரா? என்னை வஞ்சித்து ஏமாற்றிக் கல்யாணம் செய்து கொண்டு விட்டாரே, எனக்கு உண்மை தெரியும்போது நான் அவரைப் பற்றி என்ன எண்ணுவேன் என்று அவர் கடுகளவாவது யோசித்தாரா? நீங்கள் நம்பினுல் நம்புங்கள்; நம்பாவிட்டால் போங்கள். நான் உண்மையைச் சொல்லுகிறேன்: அவர் மீது எனக்குக் கொஞ்சங்கூட அன்போ, சிரத்தையோ கிடையவே கிடையாது. எப்படியோ அவர் நம்மை ஏமாற்றினுர் அல்லவா? நாமும் அவரை ஏமாற்றுவோமே!" என்று சொல்லிவிட்டு, ரூபராணி நான் என்ன சொல்லப் போகிறேனே என்ற ஆவலுடன் என் முகத்தைப் பார்த்தாள்.

(அடுத்த இதழில் முடியும்)

---

*　★　*



ரேடியோ டைரக்டர்:—உங்களுக்குத் தெரியும், ரேடியோவில் பாடுவது அப்படி யொன்றும் சிரமமில்லை. ஆனால், கூட்டத்துக்கு முன்னால் பாடுவது போல் பாவனை செய்து கொள்ள வேண்டும்.........

பாடகர்:—அதற்கென்ன, எத்தனையோ இடங்களில் கூட்டத்துக்கு முன்னால் பாடுவது போல் பாவனை செய்து கொண்ட அனுபவம் எனக்கு உண்டு!

*　★　*



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI மார்ச் 9, 1947 4 அணா

REGD. No. M. 4392

